# கீழே விழாத நிழல்

## ராஜேஷ் குமார்

# 1

நல்ல தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்ட கைக் குழந்தை மாதிரி தொலைபேசி 'திடும்'மென்று வீறிட்டது.

ட்ரேஸ் காகிதத்தில் மினி டிராப்டரை நகர்த்தி மும்முரமாய் பென்சில் கோடுகள் தீட்டிக்கொண்டிருந்த ஆனந்த் கலைந்து போய் நிமிர்ந்தான். இருபத்தேழு வயது அழகான இளைஞன். எந்த கோணத்தில் இருந்து பார்த்தாலும் லட்சணம் காட்டினான்.

"விஜி...!" பக்கவாட்டில் இருந்த அறையைப் பார்த்து குரல் கொடுத்தான்.

"என்ன அண்ணா...?" உள்ளிருந்து தங்கை விஜியின் குரல் சலிப்பாய் வெளிப்பட்டது.

"தொலைபேசி அடிக்கிறது காதுல விழலை? நான் முக்கியமான வேலையா இருக்கேன்... போய் எடுத்து பேசு."

"நான் உன்னைவிட முக்கியமான வேலையா இருக்கேன். என்னைத் தொந்தரவு பண்ணாதே அண்ணா! பரிட்சை நாளைக்கு. ஒரு நிமிடத்தைகூட .வீணாக்க நான் தயாராயில்லை."

தொலைபேசி தொடர்ந்து கத்திக் கொண்டிருக்க



கோபமாய் நாற்காலியைப் பின்னால் தள்ளிக்கொண்டு எழுந்தான் ஆனந்த். இரைந்தான்.

"உன்னோட தோழிகள்தான் இந்த நேரத்தில் போன் பண்ணுவாங்க. நீ சொன்ன தக்காளி குருமா செஞ்சிட்டிருக் கேன். வாணலியில் சூடாயிட்டிருக்கு. கொதிச்ச பிறகு உப்பைப் போடணுமா... இப்பவே போட்டுரணுமான்னு ஒரு உலகமகா சந்தேகத்தைக் கேட்கறதுக்காக போன் பண்ணுவாங்க."

"போன் பண்றது என்னோட தோழியா இருக்காது. அவங்க எல்லாருமே பரிட்சைக்கு மும்முரமா படிச்சிட்டிருப் பாங்க. போன் நிச்சயமா உனக்குத்தான். உன் ஆபீஸ் சம்பந்தப்பட்ட கஸ்டமர் எவனாவது போன் பண்ணுவான் போய் எடு." கேலியாய் அவள் சொல்லிக்கொண்டிருக்கும் போதே– தொலைபேசியை சமீபித்து– ரிசீவரை எடுத்தான் ஆனந்த்.

"அலோ..."

"அலோ... நான் அனிதா பேசறேன். லதா இருக்காளா...?"

தேனில் தோய்த்த பலாச்சுளை போல ஒரு குரல் கேட்டது.

"லதாவா...? அப்படி யாரும் இங்கே இல்லையே..."

"இது *225586*...?"

"ராங் நெம்பர்... இது *225596*" சொல்லிவிட்டு ரிசீவரைச் சாத்தினான் ஆனந்த்.

உள்ளே இருந்து விஜி கேட்டாள்.

"யாருண்ணா போன் பண்ணினது...?"

"ராங் நெம்பர்." சொல்லிக்கொண்டே தன் அறைக்குத் திரும்ப எத்தனித்தபோது– தொலைபேசி மீண்டும் அலற ஆரம்பித்தது.

ரிசீவரை எடுத்துக் காதோரம் வைத்தான்.

மறுபடி அதே சர்க்கரைக் குரல்.

"225586..."

"இல்லை. மறுபடியும் நீங்கள் எட்டுக்கு பதிலா ஒன்பதை அழுத்திட்டீங்க..."

"சரியாத்தான் எண்ணை போட்டேன்..."

"இல்லை. இது நீங்கள் கேட்ட எண் இல்லை. லைன்ல ஏதாவது குறை இருக்கலாம். இன்னொரு தடவை உங்கள் தோழியோட எண்ணுக்கு டயல் பண்ணிப் பாருங்க. டயல் இங்கே வந்துச்சுன்னா லைன் குறைன்னு தெரிஞ்சுக்கலாம்."

ரிசீவரைச் சாத்தினான் ஆனந்த்.

விஜி மறுபடி கேட்டாள்.

"என்னண்ணா இப்பவும் ராங் நெம்பர்தானா...?"

"ஆமா..."

"ராங் நெம்பர் கூட ரொம்ப நாள் பழகின மாதிரி பேசிட்டிருக்கே...?"

"ஆமா! அவள் எனக்கு அத்தை பொண்ணு பாரு! அதான் கொஞ்சி குலவிட்டிருக்கேன்."

"சரி... சரி... சண்டை பிடிக்காதே. அதான் போன் பேசி முடிச்சிட்டியே... போய் இனி உன்னோட வேலையைப் பார்க்க வேண்டியதுதானே...?"

"மறுபடியும் போன் வரும்."

அவன் சொல்லி முடிக்கவில்லை.

தொலைபேசி முணுமுணுத்து கூப்பிட்டது.

"அலோ..." என்றான்.

அதே அனிதா. சொன்னாள்.



"இந்தமுறை ரொம்ப கவனமாப் பார்த்து நம்பரைச் சரியா அழுத்தினேன். மறுபடி டயல் உங்களுக்கே வந்திருக்கு. லைன் சரியில்லை போலிருக்கு. மன்னிக்கணும். உங்களுக்குத் தொந்தரவு தந்துட்டேன்."

"பரவாயில்லை. அந்த நம்பருக்கு ரொம்ப முயற்சி பண்றீங்க. ஏதாவது முக்கியமான தகவல் சொல்ல வேண்டியிருக்கா? நான் என்னோட தொலைபேசியில் டயல் பண்ணிப் பார்க்கறேன். லைன் கிடைச்சா செய்தியை சொல்லிடுறேன்."

"இல்லை... ரொம்ப நன்றி... மிஸ்டர்... மிஸ்டர்..."

"ஆனந்த்..."

"நன்றி மிஸ்டர் ஆனந்த். நான் நேரில் பார்த்துப் பேசிக்கறேன். வைக்கட்டுமா..."



'டொக்.'

ரிசீவர் சாத்தப்பட்டது.

ஆனந்த் தன் கையிலிருந்த ரிசீவரை அதனிடத்தில் பொருத்தினான்.

அந்த அனிதாவின் குரல் இன்னமும் அவன் காதோரம் இடார் வாசித்துக் கொண்டிருந்தது.

"என்னண்ணா... மூணு தடவை போன் அடிச்சது... மூணுமே ராங் நம்பர்தானா...?"

"ஆமா..."

"முக்கியமான வேலைக்கிடையே ராங்கால் வந்தா எரிஞ்சு விழுந்துட்டு கடுகடுன்னு வருவியே...! இப்ப கோபம் வரலையா?"

பதிலொன்றும் சொல்லாமல் புன்னகைத்த— ஆனந்தையே வியப்பாய் பார்த்தாள் விஜி.

## 2

கண்ணாடி அறைக்குள் கம்ப்யூட்டர் திரையின் முன்னால் உட்கார்ந்திருந்தான் ஆனந்த். ஏ.சி தட்பவெட்ப மும்— கண்ணாடியைக் கவ்வியிருந்த சன் கன்ட்ரோல் பிலிமும்— அலுவலகத்தின் இதர நடமாட்டங்களினின்றும் தீவு மாதிரி— அவனைத் தனிமைப்படுத்தியிருந்தது.

கதவின் முகப்பில் 'டிசைனர்ஸ் டிபார்ட்மெண்ட்' என்று உச்சரிக்கும் பித்தளை எழுத்துக்கள்.

ஆனந்த் பொத்தான்களை வேகமாய் அழுத்த அழுத்த கம்ப்யூட்டரின் இருண்ட திரையில் நீளமாய் கால்குலேசன்



கள் ஊதா நிறத்தில் மேல்நோக்கி நகர்ந்தன.

கதவு தட்டப்படும் சத்தம் கேட்டுத் திரும்பினான். உள்ளே வரலாம் என்பதை அறிவிக்க— முகப்புக் கதவில் பச்சை விளக்கை ஒளிரவிட்டான். அடுத்த விநாடி—

கதவைத் தள்ளிக்கொண்டு பியூன் உள்ளே வந்தான்.

"என்னப்பா...?"

"தலைமை மேலாளர் உங்களைப் பார்க்கணும்னு சொன்னார் சார்."

"வரேன்னு சொல்லு."

ஆனந்த் பாதியில் நின்ற கால்குலேசனை கம்ப்யூட்டரின் பதிவு பைலில் போட்டுவிட்டு சிஸ்டத்தை அணைத்தான்.

எழுந்து அறையைவிட்டு வெளியே வந்தான்.

தலைமை மேலாளரின் அறையைத் தொட்டு— "சார்" என்று சொல்லி உள்ளே சென்றான்.

"வாங்க ஆனந்த்..." கம்பெனி மேலாளரின் குரல் கேட்டு— ஆனந்த் உள்ளே நுழைந்தான். ஆச்சரியப்பட்டான்.

உள்ளே— மேனேஜிங் டைரக்டரும் அமர்ந்திருந்தார்.

"வணக்கம் சார்..."

"வணக்கம்! உட்கார் ஆனந்த்."

"நன்றி சார்."

போம் நாற்காலியில்— பொதிந்தான்.

"எதுவும் முக்கியமான செய்தியா சார்...?"

எம்.டி. தனது மூக்குக் கண்ணாடியைக் சுழற்றிக் கொண்டே சொன்னார்.

"நாலு நாளைக்கு முன்னாடி தலைமை அலுவலகத்தில் ஆண்டு வாடிக்கையாளர் கூட்டம் நடத்தினோம். அனைவரும் நம்மை பற்றி மகிழ்ச்சியாக பேசினார்கள்.

இந்த பாராட்டுக்கள் உனக்குத்தான்."

"நான் 'என்னோட கடமையைத்தானே சார் செஞ்சிருக்கேன்."

"உன்னோட மூளையை கோடி ரூபாய்க்கு இன்சூர் பண்ணிடலாம்." சொல்லிச் சிரித்தார் எம்.டி.

ஜி.எம். ஆனந்தை ஏறிட்டார்.

"சாயந்தரம் உனக்கொரு வேலை இருக்கு ஆனந்த்."

"என்ன சார்?"

"ஓட்டல் காமட் போகணும் நீ."

"எதுக்கு சார்...?"

"அங்கே ஒரு வாடிக்கையாளர் தங்கியிருக்கிறார். நாம சப்ளை பண்ணியிருக்கும் கம்ப்யூட்டர் சிஸ்டத்தில் அவருக்கு நிறைய சந்தேகங்கள். அந்த சந்தேகங்களைத் தீர்த்துவிட்டு வரணும்."

"ஓ.கே. சார்."

அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு வெளியே வந்தான். ஆபரேட்டருக்கு இன்டர்காம் அழுத்திவிட்டு எண்ணை வாங்கினான்.

"அலோ... நான் ஆனந்த்."

"சொல்லுண்ணா..." என்றது விஜியின் குரல்.

"சாயந்தரம் நான் வர லேட் ஆகும்."

"நைட் டிபன்...?"

"வெளியில்தான். எனக்காக எதுவும் செய்ய வேண்டாம்."

"நன்றி! பரிட்சை சமயத்தில் என் பாரத்தைக் கொஞ்சம் குறைச்சதுக்கு நன்றி!"



"யாராவது போன் பண்ணினாங்களா...?

"உன்னோட பிரியமான ராங் நெம்பர்."

"ஓ... அந்தப் பொண்ணா... என்ன சொன்னா...?"

"தொலைபேசி அலுவலகத்தைப் பத்தி மூக்கால அழுதா! ஒரு வாரமா தோழிகூட பேச முடியலை... அவள் நம்பரை அமுத்தி அமுத்தி ஆட்காட்டி விரல் தேய்ஞ்சதும், உங்கள் அண்ணா நண்பர் ஆனதும்தான் மிச்சம்னு ஒரு பாட்டம் கொட்டித் தீர்த்தா."

"வேற போன் எதுவுமில்லையே...?"

"இல்லை..."

ரிசீவரை வைத்துவிட்டு– கம்ப்யூட்டர் முன்னால் அமர்ந்தான். ராங் நெம்பர் பெண் நினைவுக்கு வந்தாள்.

அனிதா...

அனிதா...

உருவமில்லாமல் பெயர் மட்டும் கண்முன் தோன்றிக் கொண்டே இருந்தது.

நாலைந்துமுறை தொலைபேசியில் பேசிப் பேசி ஒருவித அன்னியோன்யம் ஏற்பட்டுவிட்டது போல் தோன்றியது.

'எப்படி இருப்பாள் அந்த அனிதா?'

அவளின் தேன் குரல் ஞாபகத்தில் உரசியது. அந்தக் குரலுக்குப் பொருத்தமாய் ஒரு கற்பனை உருவத்தை மனதில் விரித்துப் பார்த்தான் ஆனந்த்.

ஐ.எஸ்.ஐ. முத்திரை குத்தின தேவதையைப் போல இருந்தது அந்த உருவம்.

# 3

ஓட்டல் காமட்டின் விசாலமான பார்க்கிங் பகுதியில் தன்னுடைய கருநீல நிற மாருதி காரை சொருகினான் ஆனந்த். பளிங்குத் தரைப் படிகளைக் கடந்து செயற்கை சொர்க்கம் போலிருந்த வரவேற்பு அறைக்கு வந்தான்.

தன் சிவப்பான உதடுகளைச் சிக்கனமாய் விரித்த அந்த வரவேற்புப் பெண்– "உங்களுக்கு என்ன வேண்டும் சார்..." என்றாள்.

"மிஸ்டர் வர்தா... நீலகிரிஸ்... எந்த அறையில் தங்கி இருக்கார்...?"

• "ஒரு நிமிடம் சார்..." என்று கம்ப்யூட்டர் பொத்தான் களுடன் விரல்களால் பேசியவள் உடனே பதில் சொன் னாள். "அறை எண் 103 சார்."

"நன்றி..." ஒன்றை உதிர்த்துவிட்டு நகரும் படிக்கட்டுகளில் மேலேறினான் ஆனந்த்.

அந்த மேலதிகாரி சீட்டில் இருந்தார் வர்தா. தொளதொள பைஜாமாவை உடுத்தியிருந்த வர்தா இரட்டை நாடி சரீரத்தோடு எலுமிச்சம்பழ நிறத்திலிருந்தார். உள்ளே போய் உட்கார்ந்ததும்–

ஆனந்த் தன்னுடைய விசிட்டிங்கார்டை நீட்டி அறிமுகப்படுத்திக்கொண்டான்.

"கம்ப்யூட்டரில் சில சந்தேகங்கள் இருக்கிறதா சொன்னீங்களாம். சந்தேகங்களை தீர்த்துவைக்கறதுக் காகத்தான் நான் வந்திருக்கேன்."

தலைமை மேலாளர் போன் பண்ணி சொன்னார். "தலைமை மேலாளர் போன் பண்ணி சொன்னார்.





"என்ன சந்தேகம் உங்களுக்கு...?"

"மிஸ்டர் ஆனந்த்– என்னோட சந்தேகங்கள் ஒருபக்கம் இருக்கட்டும். அதுக்கு முன்னால உங்ககிட்டே வேற சில விசயங்கள் பேசறதைப் பத்தி உங்களுக்கு ஆட்சேபனை எதுவும் இல்லையே...?"

ஆனந்த் நிமிர்ந்தான்.

சற்றே குழப்பத்துடன் அவரைப் பார்த்தான்.

"வேற சில விசயங்களா...?"

"ஆமாம். என்னோட கம்பெனியைப் பத்தின உங்க அபிப்ராயம் என்ன?"

"அருமையான கம்பெனி சார். எங்களோட நீண்டநாள் வாடிக்கையாளர். உங்கள் கம்பெனி வேலைகளில் பாதிக்கு மேல எங்களைத்தான் பயன்படுத்தியிருக்கீங்க. அதனால தான் நீங்க விரும்பிக் கேட்டதும் உடனடியா என்னை அனுப்பி வைச்சிருக்காங்க."

"என்னோட கம்பெனிக்கு நீங்க ஏன் வரக்கூடாது...? அங்கே எழுபத்தஞ்சு சதவீதம் உங்க சாதனங்கள்தான் நிறைஞ்சிருக்கு. அவைகளை உபயோகப்படுத்தவும் புதுப்புது முறைகளை கொண்டுவரவும் உங்களைப் போல ஒரு ஆள் தேவைப்படுது."

ஆனந்த் சங்கடமாய்ப் புன்னகைக்க–

அவர் தொடர்ந்தார்.

"நீங்கள் நினைத்துப் பார்க்காத தொகையை தர்றேன். தவிர நீங்கள் கற்பனைகூட பண்ணிப் பார்க்க முடியாத மத்த வசதிகளும் தரத் தயாரா இருக்கேன். முடிவு பண்ண வேண்டியது நீங்கதான்."

"மன்னிக்கணும் சார். இப்ப நான் வாங்கற சம்பளம்... என்னோட எம்.டி. எனக்குக் கொடுத்திருக்கும் மத்த வசதிகள் எல்லாமே எனக்கு போதுமானதுதான். வேற



கம்பெனிக்குப் போகணும்ங்கற அபிப்ராயம் எதுவும் எனக்கு இல்லை."

"உடனே பதில் சொல்ல வேண்டாம். யோசிச்சு உங்க பதிலைச் சொன்னாப் போதும்."

"யோசிக்கறதுக்கு எதுவும் இல்லை சார். இதுதான் என் பதில். உங்களுக்கு கம்ப்யூட்டரில் ஏதாவது சந்தேகம் இருந்தா கேளுங்க."

ஒரு பெருமூச்சுவிட்ட வர்தா, "உங்க நேர்மையை பாராட்டறேன் மிஸ்டர் ஆனந்த். கல்லை வீசிப் பார்த்தேன். மாங்கா விழலை" என்று மெல்லிய குரலில் சொல்லிவிட்டு– கம்ப்யூட்டர் குறித்த தன்னுடைய சந்தேகங்களைக் கேட்டுக் கொள்ள ஆரம்பித்தார்.

சுத்தமாய் ஒரு மணி நேரம்.

ஒரு எல்.கே.ஜி. குழந்தைக்குச் சொல்லித் தருவது மாதிரி அவருடைய அத்தனை சந்தேகங்களுக்கும் தெள்ளத் தெளிவாய் பதில் சொல்லி விளக்கி முடித்தான்.

அவரிடம் விடைபெற்று வெளியே வரும்போது மணி எட்டரை.

வரவேற்பறையைக் கடந்தவன்– அந்தக் குரலால் ஈர்க்கப் பட்டு சட்டென நின்றான்.

"ஆமா 225586 வேணும்..."

போன வாரத்தில் பலமுறை தொலைபேசியில் கேட்டுப் பழகிய அதே குரல். திரும்பிப் பார்த்தான் அனிதா! மிஸ் யுனிவர்ஸ் பட்டத்தை சுஷ்மிதா சென்னிடமிருந்து பிடுங்கி இவளிடம் தூக்கிக் கொடுக்கலாம் போலக் கச்சிதமான உடல்வாகு. புன்னகையில் நூறு வாட்ஸ் மின்சாரம் இருந் தது.

அவள் கேட்ட எண்ணை வரவேற்புப் பெண் போட்டுக் கொடுக்க– ரிசிவரை வாங்கிப் பேச ஆரம்பித்தாள்.

"நான் அனிதா பேசறேன். லதா இருக்காளா...?"

"..........."

"இல்லையா...? எங்கே ஊட்டியா...?"

"..........."

"யாரு நான் போன் பண்ணலையா..? போன வாரம் பூரா ஒரு பத்துத் தரமாவது பண்ணியிருப்பேன். உன் வீட்டு போன் எண்ணை அழுத்தினா வேற ஒருத்தர் வீட்டுக்கு ரிங் போகுது..."

"..........."

"இப்ப அந்த கோளாறு சரியாயிருச்சா...! சந்தோசம். அப்புறம்... கார்... வீட்லதான் இருக்கா...?"

"..........."

"அண்ணா எடுத்துட்டுப் போயிருக்காரா...? சரி."

அந்த அனிதா ரிசீவரைச் சாத்தினாள்.

ஆனந்த் அவள் எதிரே போய் நின்றான். புன்னகைத்தபடி கேட்டான்.

"நான் யாருன்னு உங்களால சொல்ல முடியுமா மிஸ் அனிதா."

அவள் பெரிய விழிகளைப் படபடத்து அவனைப் பார்த்தாள்.

"மன்னிக்கணும்.... தெரியலையே..."

"நல்லா யோசிச்சு சொல்லுங்க. என்கூட பேரன்ல ஆறு தரம் பேசியிருக்கீங்க..."


அவள் உதட்டைப் பிதுக்கினாள்.

"மன்னிக்கணும்... நினைவுக்கு வரலை..."

"என் பேர் ஆனந்த்."

சட்டென்று அந்த அனிதாவின் முகத்தில் ஒரு





பிரகாசம் பரவியது.

"ஓ... நீங்கள்தானா... அது...? எங்கே இந்தப் பக்கம்?"

"இந்த ஓட்டல்ல எங்க வாடிக்கையாளர் தங்கியிருக்கார், அவரைப் பார்த்துப் பேசிட்டு வந்தேன். வர்ற வழில உங்க குரலும்... நீங்கள் வழக்கமாப் பேசற அந்த நம்பரும் காதில் விழுந்தது."

"நீங்கள் ஒரு பெரிய கம்பெனியில் டிசைன் எஞ்சினியர்ன்னு சொன்னீங்க இல்லே.?"

"ஆமா."

"நம்ம நட்பு ரொம்ப வித்யாசமா ஆரம்பிச்சிருக்கு. பொதுவா ஒரு மூணாம் நபர் மூலமா அறிமுகமாகறதுதான் வழக்கம். நாம ராங் கால் மூலமா நமக்கு நாமே அறிமுகமாகிகிட்டோம்..."

"ஆமா... ஆமா... உங்களை நேர்ல பார்க்கணும்ங்கற ஆவல் எனக்கு இருந்தது. அந்த வாய்ப்பு இத்தனை சீக்கிரமாக் கிடைக்கும்னு நான் நினைக்கலை. இன்னிக்குக் காலையிலகூட போன் பண்ணினீங்களாமே...? என் தங்கை சொன்னா..."

"என் தோழி லதாவுக்குத்தான் முயற்சி பண்ணினேன். அவங்க லைன்ல ஏதோ கோளாறு. இப்ப சரியாயிடுச்சு. இனிமேல் உங்களுக்குத் தலைவலி இல்லை."

"இல்லை... இல்லை... வாங்களேன்!" என்றவன் சற்றுத் தள்ளி இருந்த குளிரூட்டப்பட்ட சாப்பாட்டு அறையைக் காட்டிக் கேட்டான்.

"முதன் முதலா சந்திச்சிருக்கோம். வாங்களேன் ஏதாவது சாப்பிடுவோம்..."

"சாப்பிடறதில் எனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை. ஆனால், நான் இங்கே வந்ததே ஒரு வரவேற்பில் கலந்துக்கிறதுக்காக. இப்பத்தான் அங்கே போயிட்டு வெளியே



வந்தேன்... கார் ஸ்டார்ட் ஆகலை. பெல்ட் மாத்தணும்னு சொல்லிட்டு டிரைவர் வாங்கப் போயிருக்கான். லதாவுக்கு போன் பண்ணி காரை கொண்டுவரச் சொல்லலாம்ன்னு இருந்தேன். அவங்க கார் வெளியே போயிருக்காம். இங்கே எனக்கு அறிமுகமானவங்களும் யாருமில்லை."

"உங்களுக்கு ஆட்சேபனை இல்லேன்னா என் கார்ல வரலாமே?"

"உங்களுக்கு சிரமம் எதுவுமில்லையே...?"

"இல்லை... இல்லை... வாங்க..." வெளியே வந்து காரை நோக்கிப் போனார்கள்.

அனிதா பக்கவாட்டில் அமர்ந்துகொள்ள— பார்க்கிங் வரிசையில் இருந்து காரை விடுவித்தான் ஆனந்த்.

"உங்கள் காரை டிரைவர் கொண்டு வந்துருவானா...?"

"ஆமா. ஓட்டல் வரவேற்பில் தனியாக் காத்திருக்க ஒரு மாதிரியா இருந்தது. அதான் டிரைவர்கிட்டே ஆட்டோ பிடிச்சாவது நான் வீட்டுக்குப் போயிடறேன்... நீ காரை சரிபண்ணி எடுத்துட்டு வந்துருன்னு சொல்லிட்டேன்."

கார் சாலையைத் தொட்டு வேகம் பிடிக்க ஆனந்த்— கேட்டான்.

"உங்கள் வீடு எங்கே...?"

"பாரதி நகர் எக்ஸ்டென்சன். ஐந்தாவது தெரு."

கால் மணி நேர பயணத்தில்— பாரதி நகர் எக்ஸ்டென்சனின் ஐந்தாவது தெருவைத் தொட்டது கார்.

"அதோ அந்த வீடுதான்...."

கையைக் காட்டினாள்— அனிதா.

அந்த இராத்திரி வேளையிலும்— புத்தம்புது டிஸ்டம்பர் பூச்சு பளபளத்தது. கட்டிடக் கலைஞனின் கைவண்ணத்தில் அந்த மினி பங்களாவின்— முகப்பு அழகான வளைவு

கனுடன் வடிவமைக்கப்பட்டிருந்தது. வாசல்கேட் ஓரமாய்க் காரை நிறுத்தினான் ஆனந்த்.

கீழே இறங்கிய அனிதா– "உள்ளே வாங்க... மிஸ்டர் ஆனந்த்" என்றாள்.

ஆனந்த் வாட்சைக் காட்டிப் புன்னகைத்தான்.

"ஒன்பது மணிக்கு மேலாயிடுச்சு. இந்த நேரத்துக்கு மேல் உங்க வீட்ல உள்ளவங்களை தொந்தரவு பண்ணணுமான்னு யோசிக்கிறேன்."

"உங்கள் வருகையை தொந்தரவா நினைக்கக்கூடியவங்க யாரும் வீட்டில் இல்லை."

"அப்படின்னா...?"

"வீட்ல நானும் என்னோட அப்பாவும்தான்."

"நான் இன்னொரு நாள் வர்றேன். இன்னிக்கு வேண்டாம். குட் நைட்."

ஆனந்த் நாசுக்காய் மறுத்துவிட்டுக் காரின் கியரை மாற்றினான்.

காரை விரட்டி– வீட்டை நெருங்கினபோது நேரம் ஒன்பதரையைக் கடந்து இருந்தது.

உற்சாக விசிலுடன் வீட்டுக்குள் பிரவேசித்த ஆனந்தைப் பார்த்துப் புன்னகைத்தாள்– விஜி.

"என்னண்ணா விசில் பறக்குது? ஏதாவது சந்தோசமான சமாச்சாரமா?"

"ம்... இன்னிக்கு அனிதாவைப் பார்த்தேன்."

"ஆன்... எப்படி?"

"ஒரு கவிதை தொகுப்பே போடலாம்."



"எக்கச்சக்கமா ஜொள்ளு விட்டியா?"

"சேச்சே...."

"அவள் கார் ரிப்பேர்... நம்ம கார்லதான் அவளை வீட்டுல விட்டுட்டு வர்றேன்."

"விசயம் அந்த அளவுக்குப் போயாச்சா...?"

"ஏய்... என்ன ஒரு மாதிரி சிரிக்கிறே...? இது வெறும் நட்புமுறைதான்."

"இப்படித்தான் ஆரம்பத்தில் சொல்லுவே! அனிதாவோட அப்பாகிட்டே பேசினியா?"

"இல்லை. அவளை வீட்டு வாசல்ல விட்டுட்டு நேரமாயிட்டதால இன்னொரு நாள் வர்றதா சொல்லிட்டு வந்துட்டேன்."

"நீ லாய்க்கில்லை..."

"என்ன சொல்றே?"

"வீட்டுக்குப் போயிட்டு வந்திருக்கணும்."

"இன்னொரு நாளைக்கு போனா போகுது."

"அந்த சந்தர்ப்பம் வரலைன்னா?"

"வரும்."

"எப்படி சொல்றே?"

"நான் சொல்லலை."

"பின்னே?"

"என் மனசுக்குள்ளே இருக்கிற பட்சி சொல்லுது."

## 4

மறுநாள் காலை.

பத்து மணி.

ஆனந்த் பெட்டியோடு ஆபீசுக்குள் நுழையும்போதே முன்னறையில் உட்கார்ந்திருந்த தொலைபேசி ஆபரேட்டர் மாயா புன்னகைத்தாள்.

"குட்மார்னிங் சார்... எம்.டி. உங்களைக் கேட்டார்."

ஆனந்த் ஆச்சரியப்பட்டான்.

"எம்.டி. நேத்துதானே வந்துட்டு போனார். இன்னிக்கு அவர் வர்ற நாள் இல்லையே...?"

"மன்னிக்கணும் சார். எனக்கு காரணம் தெரியலை. நீங்கள் ஆபீஸ் வந்ததுமே உங்களை உடனே அவரோட அறைக்கு வரச்சொன்னார்."

ஆனந்த் உள்ளே போனான். வியப்பு மனசுக்குள் மண்டி போட்டு உட்கார்ந்திருந்தது.

'எம்.டி. எதற்காக வரச்சொல்லியிருப்பார்?'

வழியில் எதிர்பட்ட அலுவலகத்தின் சக ஊழியர்கள் குட்மார்னிங் சொல்ல, ஆனந்தும் இயந்திரத்தனமாய் குட்மார்னிங் சொல்லிக்கொண்டே எம்.டி. அறைக்கு முன்பாய் வந்து நின்றான். ஆட்காட்டி விரலை மடக்கி பரந்த அந்த தேக்குமரக் கதவைத் தட்டினான்.

"டொக்... டொக்..."

"உள்ளே வாருங்கள்."

கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே போனான்.

"குட்மார்னிங் சார்..."



சிகரெட் பைப்பில் புகை பிடித்தபடி– கோப்பு ஒன்றை பார்வையிட்டுக்கொண்டிருந்த மானேஜிங் டைரக்டர் புன்னகையைக் காட்டினார். "உட்காருங்க ஆனந்த்."

ஆனந்த் தயக்கமாய் உட்கார்ந்தபடியே கேட்டான். சார் இவ்வளவு காலையில் நீங்கள் ஆபீசுக்கு வந்து நான் பார்த்ததே இல்லை. ஏதாவது முக்கியமான விசயமா சார்?"

"ஆமா."

"ஏதாவது புதிய வேலை இருக்கா?"

"இல்லை."

"பின்னே...?"

எம்.டி. சிரித்துக்கொண்டே நாற்காலியைத் தள்ளிக் கொண்டு எழுந்தார். சுவரில் அப்பியிருந்த அலமாரியின் கதவைத் திறந்து– நீளமான பிளாஸ்டிக் கவரிலிருந்து அதை எடுத்தார்.

சந்தன மாலை.

ஏ.சி. அறையின் காற்று பட்டதும் அந்த சந்தன மாலை மணத்தது.

மாலையோடு ஆனந்தை நெருங்கினார் எம்.டி. அவன் திகைத்துக்கொண்டிருக்கும்போதே கழுத்தில் போட்டார்.

"ச... சார்... எ... என்ன... இது...? எனக்கு எதுக்காக மாலை?"

"நீ இந்த கம்பெனி மேல் வைச்சிருக்கிற விசுவாசத்தை பாராட்டும் வகையில் நிர்வாகம் உங்களுக்கு போடற மாலை இது."

"விசுவாசமா...? என்ன சார் சொல்றீங்க?"

எம்.டி. புன்னகைத்து கேட்டார்.

"நேத்து ஓட்டல் 'காமட்'ல யாரைப் பார்க்கப் போனீங்க

ஆனந்த்?"

"மிஸ்டர் வர்தாவை..."

"கம்ப்யூட்டர் சந்தேகங்களை கேட்கிறதுக்கு பதிலாய் வர்தா உங்ககிட்ட என்ன கோரிக்கை வைச்சார்?"

"சார்... அது... வந்து... வந்து..."

"சம்பளம் அதிகமாக தர்றேன். என்னோட கம்பெனிக்கு வந்துடுன்னு அவர் சொன்னார் இல்லையா?"

"ஆ... ஆமா."

"அதுக்கு நீங்க என்ன சொன்னீங்க?"

"சார்..."

"இப்ப நான் வாங்கற சம்பளம், என்னோட எம்.டி. எனக்கு கொடுத்து இருக்கும் வசதிகள் எல்லாமே எனக்கு போதுமானதா இருக்கு. வேற கம்பெனிக்கு போகணும்ங்கிற அபிப்பிராயம் எனக்கு எதுவும் இல்லை. இந்த வார்த்தைகளைச் சொல்லி உங்களுக்கு இந்தக் கம்பெனி மேல் இருக்கிற விசுவாசத்தைக் காட்டிட்டீங்க. பணத்துக்கும் வசதிகளுக்கும் அடிமையாகாத உங்களை இந்த கம்பெனி நிர்வாகம் பாராட்ட கடமைப்பட்டிருக்கு..."

ஆனந்த் புன்னகையோடு கழுத்தில் இருந்த மாலையைக் கழற்றினான். "சார்! நான் வேலை பார்க்கிற இந்த ஸ்தாபனம் என்னைப் பெற்ற தாய்க்கு சமமானது. பெற்ற தாய்க்கு யாராவது துரோகம் பண்ணுவாங்களா சார்?"

"நீங்கள் சொல்ற இந்த வார்த்தைகளைக் கேட்கும்போது எனக்கு ரொம்பவும் சந்தோசமாயிருக்கு ஆனந்த். கூடிய சீக்கிரமே கம்பெனி போர்டு மீட்டிங்ல பேசி, உங்கள் பிரமோசனுக்கு ஏற்பாடு பண்றேன்."

"நன்றி சார்" என்று சொன்ன ஆனந்த் குரலை இழுத்தான். "ஒரு சந்தேகம் சார்..."

"என்ன?"



"நேற்று ஓட்டலில் மிஸ்டர் வர்தாவோடு பேசினது உங்களுக்கு எப்படி தெரிஞ்சது?"

"வர்தாவே எனக்கு போன் பண்ணி சொன்னார்."

"குழந்தையைக் கிள்ளிட்டு தொட்டிலையும் ஆட்டி விட்டிருக்கார்."

"இல்லை. இல்லை. மிஸ்டர் வர்தா எதையுமே வெளிப்படையா பேசிவிடுகிற டைப். உங்களை தன் பக்கம் இழுக்கப் பார்த்திருக்கார். முடியலை. அதையும் அவரால மனசுக்குள்ளே வைச்சுட்டிருக்க முடியலை. எனக்கு போன் பண்ணி சொல்லிட்டார். மிஸ்டர் ஆனந்த்... உங்கள் குடும்பத்துல நீங்களும் உங்கள் தங்கச்சியும் மட்டும்தானே?"

"ஆமா சார்."

"அப்பா அம்மா?"

"அப்பா பத்து வருடத்துக்கு முன்னாடியும், அம்மா ஆறு வருடத்துக்கு முன்னாடியும் காலமாயிட்டாங்க."

"தங்கச்சி பெயர் விஜயா. கூப்பிடறது விஜி."

"படிக்கிறாளா?"

"உம்."

"என்ன படிக்கிறா?"

"எம்.பி.ஏ."

"ஒருநாளைக்கு விஜியை நம்ம வீட்டுக்கு கூட்டிட்டு வாயேன்."

"கூட்டிட்டு வர்றேன் சார்" சொன்ன ஆனந்த் எழுந்துகொண்டான். "கம்ப்யூட்டர் சாப்ட்வேர் பிரிவில் ஒரு பெரிய தவறு இருக்கிறதா நேற்றைக்கே தலைமை மேலாளர் குறிப்பு எழுதிவைச்சிருந்தார் சார். நான் போய் பார்க்கணும்..."

"ஓ.கே. ஆனந்த். நீங்கள் போய் உங்க வேலையை பாருங்க. சாயந்தரம் மறுபடியும் சந்தித்து பேசுவோம். ஜெர்மனி மேக் புது கம்ப்யூட்டர் ஒண்ணை விற்பனை பண்ற யோசனையில் கம்பெனி நிர்வாகம் இருக்கு. அந்த கம்ப்யூட்டர் பற்றின விபரங்கள் என்கிட்ட இருக்கு. சாயந்தரம் வாங்க. பேசலாம்."

"எத்தனை மணிக்கு சார்?"

"அஞ்சு மணிக்கு வாங்களேன்."

ஆனந்த் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான். மனசு பூராவும் மத்தாப்பூ வெளிச்சமாய் மகிழ்ச்சி நிரம்பியிருந்தது. எம்.டி. கையால் சந்தன மாலை.

'யாருக்கு கிடைக்கும் இந்த அதிருஷ்டம்?'

ஆனந்துக்கு தரையில் கால்கள் பாவவில்லை. சந்தோசத்தில் மிதந்துகொண்டே தன் அறைக்கு திரும்பியவனை அலுவலக பணியாள் பொன்னுசாமி எதிர்கொண்டான்.

"சார்..."

"என்ன பொன்னுசாமி?"

"உங்களைப் பார்க்க ஒரு பொண்ணு வந்திருக்கு சார்."

"பொண்ணா?"

"ஆமா சார். பெயர் அனிதாவாம். வரவேற்பு அறையில் உட்கார்ந்திருக்கு."

ஏற்கனவே இருந்த சந்தோசத்தில் இன்னமும் கொஞ்சம் சந்தோசம் ஒட்டிக்கொள்ள வேகவேகமாய் வரவேற்பு அறையை நோக்கிப் போனான் ஆனந்த்.

அனிதா சோபாவில் உட்கார்ந்து– ஒரு வார இதழை புரட்டிக்கொண்டிருந்தாள்.

"அலோ... மிஸ் அனிதா... குட்மார்னிங்."



அனிதா நிமிர்ந்தாள்.

"குட்மார்னிங் மிஸ்டர் ஆனந்த். ஆபீஸ் வரைக்கும் வந்து உங்களுக்கு தொல்லை தர்றதுக்காக மன்னிக்கணும்."

"இல்லை. இல்லை. இதில் என்ன சிரமம் இருக்கு..." ஆனந்த் தோள்களை குலுக்கிக்கொண்டே அனிதாவுக்கு எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்தான்.

"என்ன விசயம்? சொல்லுங்க."

"வந்து... வந்து... நீங்க தப்பா நினைச்சுக்கக் கூடாது."

"எதுவாயிருந்தாலும் பரவாயில்லை... சொல்லுங்க."

"வந்து...என் கழுத்துல போட்டிருந்த கோல்ட் செயினைக் காணோம்."

"என்னது... செயினைக் காணோமா?"

"ஆமா. நேற்று உங்க கார்ல ஏறும்போது என் கழுத்துல இருந்தது. அதுக்கப்புறம் நான் கவனிக்கலை. காலையில் குளிக்க போகும்போது பார்க்கிறேன்... செயினைக் காணோம். வீடு பூராவும் தேடி பார்த்துட்டேன். கிடைக்கலை. திடீர்ன்னு நேற்று உங்க கார்ல வந்தது ஞாபகத்துக்கு வந்தது. ஒருவேளை காரில் விழுந்திருக்குமோன்னு பார்க்க வந்தேன். அது ரெண்டு பவுன் செயின்தான். எங்கம்மா எனக்கு ஆசையா போட்டது. அம்மா நினைவா என்கிட்டே இருக்கிற ஒரே பொருள் அந்த செயின் ஒண்ணுதான்."

ஆனந்த் எழுந்தான்.

"வாங்க. கார்ல இருக்கான்னு பார்த்துடலாம்."

இருவரும் வெளியே வந்து கார் பார்க்கிங்கை நோக்கி நடந்தார்கள்.

ஆனந்த் கேட்டான். "செயின் காணாம போனது உங்களுக்கு எப்போ தெரிஞ்சது?"

"குளிக்கப் போகும்போது."

"உடனே எனக்கு போன் பண்ணியிருந்தா... அந்த நிமிடமே கார்ல பார்த்திருப்பேன்."

"போன் பண்ணி கேட்க மனசுக்கு சங்கடமா இருந்தது."

"இதுல சங்கடப்பட என்ன இருக்கு? நீங்க தாராளமா போன் பண்ணி கேட்டிருக்கலாம்."

காருக்குப் பக்கத்தில் வந்தார்கள்.

"ஒன்பது மணி வரைக்கும் கேட்கக்கூடாதுன்னு நினைச்சுட்டு, அப்புறம் கேக்கிறதுல தப்பில்லைன்னு நினைச்சு போன் பண்ணினேன். ஆனால் போனை யாரும் எடுக்கலை. வீட்ல யாரும் இல்லைன்னு நினைச்சு... நேரா உங்க ஆபீசுக்கு வந்துட்டேன். அது தப்பில்லையே..."

"இல்லை. நமக்கு பிடித்தமான ஒரு பொருள் காணாமல் போனால் மனசு சங்கடப்படத்தான் செய்யும். உங்கள் செயின் கார்ல தவறி விழுந்திருந்தா... கண்டிப்பா காருக்குள்ளதான் இருக்கும்."

ஆனந்த் காரை நெருங்கி– சாவியைப் பொருத்தி கதவைத் திறந்தான். "நீங்கள் முன்சீட்லதான் உட்கார்ந்துட்டு வந்தீங்க... செயின் விழுந்திருந்தா இங்கேதான் விழுந்து இருக்கணும்."

அனிதா தான் உட்கார்ந்திருந்த இடத்தில் குனிந்து பார்த்து– இரண்டு நிமிடங்களை தேடுதலில் செலவழித்து விட்டு முகவாட்டத்தோடு நிமிர்ந்தாள்.

"இல்லையே."

"நேற்று நீங்கள் கார்ல ஏறும்போது உங்கள் கழுத்துல செயின் இருந்ததா?"

"உம்... இருந்தது."

"நல்லா ஞாபகப்படுத்தி பாருங்க."

"எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு. உங்கள் கார்ல



போயிட்டிருக்கும்போது– செயினை பல்லால் கடிச்சிட்டிருந்த ஞாபகம் எனக்கு நல்லாவே இருக்கு."

"வீட்ல தேடிப் பார்த்தீங்களா?"

"உம்... பார்த்தேன். மறுபடியும் போய் தேடிப் பார்க்கணும்... மன்னிக்கணும். உங்களுக்கு ரொம்பவும் தொந்தரவு கொடுத்துட்டேன். நான் வரட்டுமா?"

"காரில்தானே வந்திருக்கீங்க?"

"ஆமா. உங்கள் ஆபீசுக்கு எதிரில் இருக்கிற கார் பார்க்கிங்கில் காரை நிறுத்திட்டு வந்திருக்கேன். நான் வரட்டுமா?"

"கவலைப்படாதீங்க. உங்கள் செயின் கண்டிப்பா கிடைக்கும்."

"நன்றி."

அனிதா ஆபீஸ் வாசலை நோக்கிப் போக– அவள் போவதையே பார்த்துக்கொண்டு நின்றான் ஆனந்த்.

'உருவிவிட்ட சாட்டை மாதிரி உடம்பை என்னமாய் வைத்திருக்கிறாள்?'

மனசுக்குள் அவசர அவசரமாய் ஒரு பட்டிமன்றம் நிகழ்த்தினான்.

'அனிதாவை காதலிக்கலாமா?'

'வேண்டாமா?'

அனிதா அழகாகவும் இருக்கிறாள். வசதியாகவும் இருக்கிறாள். பெரிய குடும்பம் கிடையாது. அப்பா மட்டும்தான்."

விழிக்கும் அனிதாவைப் பிடிக்கும்.

"என்ன சார்... அப்படியே திகைச்சு போய் நின்னுட்டீங்க?"

பின்பக்கம் குரல் கேட்டு சட்டென்று திரும்பிப்

பார்த்தான் ஆனந்த்.

மானேஜரின் பி.ஏ. ரகுராம் நின்றிருந்தான். முகத்தில் புன்னகை.

ஆனந்த் நகர்ந்தான். "ஒன்னுமில்லை..."

"அந்தப் பெண்ணை உங்களுக்குத் தெரியுமா சார்?"

"சும்மா... போன்ல பேசி பழக்கம். நேற்று என் காரில் லிப்ட் கொடுத்தேன். கழுத்துல போட்டிருந்த செயின் காணாமே போயிடுச்சாம். காரில் விழுந்திருக்குமான்னு பார்க்க வந்தா... செயின் காரிலேயும் இல்லை."

பி.ஏ. ரகுராம் சிரித்தான். "அவளுக்கு வாழ்க்கையே காணாமல் போயிருக்கு. இந்த செயின்தானா பிரமாதம்?"

ஆனந்த் குழப்பமாய் ரகுராமை ஏறிட்டான்.

"ரகுராம்... நீங்கள் என்ன சொல்றீங்க...? அனிதாவோட வாழ்க்கை காணாமே போயிருக்கா?"

"ஆமா! இவ்வளவு அழகாயிருக்கிற அனிதா ஒரு ஐம்பத்தஞ்சு வயசு கிழவனுக்கு மனைவி."

## 5

ஆனந்தின் முகத்தில் அதிர்ச்சி தத்தி தததி பரவியது.

"எ... ன்... ன... து... அனிதா கல்யாணமானவளா?"

"ஆமா சார். பாரதி நகர் எக்ஸ்டென்ஷன் ஐந்தாவது தெருவுல அனிதாவுக்கு வீடு. எனக்கு நாலாவது தெருவல வீடு. இந்தப் பெண்ணைப் பற்றி எனக்குத் தெரியும். ஆனால் பேசினதில்லை. ரொம்பவும் அமைதியான டைப்."

"ரகுராம்! நீங்கள் நினைக்கிறது தப்பு. அனிதா



வீட்ல இருக்கிற பெரியவர் அவளோட கணவர் இல்லை... அவளுடைய அப்பா. அனிதா என்கிட்டயே சொல்லியிருக்கா."

ரகுராம் சிரித்தான். "மன்னிக்கணும் சார். எனக்கு நல்லா தெரியும். அந்தப் பெரியவர் அனிதாவோட அப்பா இல்லை. கணவர். எங்கள் ஏரியா தபால்காரர் சொல்லியிருக்கார்."

"அனிதா எதுக்காக பொய் சொல்லணும்?"

"வயசான ஒருவரை தன் கணவருன்னு சொல்லிக்க அனிதா வெட்கப்பட்டிருக்கலாம். எந்த பெண்ணுக்குத்தான் ஒரு கிழட்டுப்பயலை கணவன்னு சொல்லிக்க மனசு வரும் சார்?"

"உண்மைதான். உலகத்துல இருக்கிற ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு பிரச்சினை... இந்தப் பொண்ணு அனிதாவுக்கு இப்படியொரு பிரச்சினை..."

ஆனந்த் தன் இருக்கைக்கு வந்து உட்கார்ந்தான்.

மனசுக்குள் பாலைவன வெப்பம் பரவியிருந்தது.

'அனிதா கல்யாணமானவளா?'

'எதற்காக இந்த விசயத்தை மறைக்க வேண்டும்...? ஐம்பத்தைந்து வயது நபருக்கு இரண்டாவது மனைவியாக வாழ்க்கைப்பட்டிருக்கலாம். அந்த உண்மையை சொல்லி விட்டு போயிருக்கலாம்... இதை ஏன் மறைக்க வேண்டும்?'

திடீரென்று உள்மனசுக்குள் ஒரு குரல் அனிதாவுக்காக பரிந்து பேசியது.

'அனிதாவைப் பார்த்தால் பொய் சொல்லக்கூடியவளாக தெரியவில்லை...?'

'கண்ணால் பார்ப்பதும் பொய். காதால் கேட்பதும் பொய். தீர விசாரித்து அறிந்துகொள்வதே மெய்!'

'இன்றைக்கு சாயந்தரம் அனிதாவின் வீட்டுக் திடீரென்று போய் பார்த்தால் என்ன?'

போவது என்கிற முடிவுக்கு வந்தான் ஆனந்த்.

## 6

**பா**ரதி நகர் எக்ஸ்டன்ஷன்.

ஐந்தாவது தெருவின் ஆரம்பத்தில் செழித்து வளர்ந்து இருந்த ஒரு மரத்துக்கு கீழே காரை நிறுத்திவிட்டு ஆனந் கீழே இறங்கியபோது மாலை ஆறரை மணி.

சுற்றுப்புறம் இருட்டிக்கொண்டிருந்தது.

ஆனந்த் காரின் கதவுகளை சாத்தி– பூட்டிக்கொண்டு சற்றுத் தொலைவில் இருந்த அனிதாவின் குட்டி பங்களாவை நோக்கி நடைபோட்டான்.

மனசுக்குள் அனிதா உட்கார்ந்திருந்தாள்.

'இவ்வளவு அழகான அனிதா ஒரு கிழவனுக்கு மனைவியா? கடவுளே' ரகுராம் சொன்னது பொய்யாக இருக்க வேண்டும்!'

'இருக்குமா?'

இதயம் படபடத்தது.

அனிதாவின் வீட்டை நெருங்க நெருங்க– அந்த துடிப்பு அதிகமாகியது. முகமும் உள்ளங்கைகளும் வியர்த்தது.

'திரும்பிப் போய்விடலாமா?'

'இது நமக்கு வேண்டாத விவகாரம்!'

'போன வாரம் வரைக்கும் அந்த அனிதா யார் என்றே தெரியாது. இவள்மேல் எனக்கு எதற்காக அக்கறை



றக்க வேண்டும்?'

'அவளுக்கு கல்யாணமாகியிருந்தால் என்ன? ஆகாவிட்டால்தான் எனக்கு என்ன?'

'இவ்வளவுதூரம் வந்தாயிற்று. போய் பார்த்துவிடலாம்!'

ஆனந்த் நடந்தான்.

பங்களா பக்கத்தில் வந்தது.

காம்பவுண்ட் கேட் மெலிதாய் திறந்து இருக்க ஆனந்த் தை தள்ளிக்கொண்டு நடந்து போர்டிகோவைத் தாட்டான்.

பங்களாவுக்குள்ளே நிசப்தம்.

போர்டிகோ படியேறி– அழைப்புமணி சுவிட்சைத் தாட்டான்.

அது உள்ளே 'டிடிங்' என்று இனிமையாய் திரொலித்தது. இதயம் சின்னதாய் தவிப்புக்குள் விழுந்து படத்தது.

அரை நிமிட அவகாசத்திற்குப் பின்–

கதவு மெல்லத் திறந்தது.

அனிதா நின்றிருந்தாள். கத்திரிப்பூ நிறத்தில் சுடிதார், நெற்றியின் மையத்தில் அதே நிற ஸ்டிக்கர். கண்களில் ரிதாய் மலர்ந்தாள்.

"ஓ... மிஸ்டர் ஆனந்த்... நீங்களா? என்ன இனிமையான திப்பு!"

ஆனந்த் அவளையே பார்த்தான்.

'இவள் கல்யாணமானவளா?'

"என்ன ஆனந்த் அப்படி பார்க்கறீங்க... உள்ளே வாங்க."

சொல்லிவிட்டு அறையை நோக்கிப் போக– ஆனந்த்



அவளை பின்தொடர்ந்தான். அறை பெரிதாக இருந்தது. மையத்தில் ரோஜா நிற வெல்வெட்டில் சோபாக்கள்.

"உட்காருங்க ஆனந்த்."

உட்கார்ந்தான். பார்வை வீடு பூராவும் அலைந்தது. பார்வைக்கு யாரும் தட்டுப்படவில்லை. மெல்லிய குரலில் கேட்டான்.

"வீட்ல வேற யாரும் இல்லை போலிருக்கு?"

"ஆ... ஆமா..."

"அப்பா...?"

"அ... அவர்... வெளியூர் போ... போயிருக்கார்..." குரல் அவளுடைய தொண்டையிலிருந்து சற்றே நடுக்கமாய் வெளிப்பட்டது.

"அனிதா! இந்த உலகத்திலேயே எனக்கு பிடிக்காதவங்க யார் தெரியுமா?"

"யாரு?"

"பொய் பேசறவங்க."

அவள் முகம் உடனே மாறியது. உதடுகள் நடுக்கமாய் ஆனந்த் என்ற பெயரை உச்சரித்தது.

"அனிதா! என்கிட்ட எந்த பொய்யும் வேண்டாம். உங்களுக்கு கல்யாணமாயிடுச்சா இல்லையா?"

"ஆ... ன... ந்... த்..."

"நான் சொல்றேன். உங்களுக்கு கல்யாணமாயிடுச்சு. வயதான ஒருத்தருக்கு இரண்டாம்தாரமா வாழ்க்கைப் பட்டிருக்கீங்க... அவரைத்தான் அப்பான்னு பொய் சொல்லியிருக்கீங்க... சரியா?"

அனிதா தலைகுனிந்து மவுனமாய் நின்றாள். ஆனந்த் குரலை உயர்த்திக் கேட்டான்.

"என்ன... நான் சொன்னது சரியா?"

"ச... ரி... தான்..."

"எதுக்காக இந்தப் பொய்?"

அனிதா நிமிர்ந்தாள். கண்களில் நீர் பளபளத்தது
"ஆனந்த்! உங்களை ஏமாத்தணும்ங்கிறதுக்காக அந்த
பொய்யை நான் சொல்லலை. என் வாழ்க்கையோட மிக
பெரிய துரதிருஷ்டம் என்னோட கல்யாணம்தான்
அதைப்பற்றி நான் வெளியே சொல்ல விரும்பறதில்லை."

"காரணம்?"

"எனக்காக மத்தவங்க பரிதாபப்படறதை நான்
என்னிக்குமே விரும்பமாட்டேன். திடீரென்று சந்திச்
உங்ககிட்ட என்னோட அவல வாழ்க்கையைப் பற்
சொல்வானேன்..."

"அதுக்காக பொய் சொல்லலாமா?"

"நான் சொன்ன பொய்யினால் நீங்கள் ஏதாவது
பாதிக்கப்பட்டீங்களா?"

"இ... இல்லை..."

"பின்னே அந்த பொய்க்காக நீங்கள் கவலைப்பட
வேண்டியதில்லை."

"இருந்தாலும்..."

அனிதா குரல் தழுதழுத்தாள்.

"இதோ பாருங்க மிஸ்டர் ஆனந்த், உங்களை பொய்
சொல்லி ஏமாத்தணும்ங்கிறது என்னோட எண்ண
இல்லை. ஏதோ தொலைபேசி மூலமா நாம ரெண்டு பேரு
நண்பர்களாக பழகிட்டோம். அந்த பழக்கம் கூட ஆரம்ப
நிலைதான். இதுவரைக்கும் நாம மூணு தடவை சந்திச்
பேசியிருக்கோம். இந்த குறுகியகால பழக்கத்துக்குள்ளே
என்னைப் பற்றின எல்லா உண்மைகளையும் சொல்லி



முடியுமா என்ன? உதாரணத்துக்கு உங்களையே
எடுத்துக்கொள்வோம்... இந்த மூணு சந்திப்புக்களிலேயே
உங்களைப் பற்றின எல்லா உண்மைகளையும் சொல்லிட்
டீங்களா என்ன?"

ஆனந்த் எதுவும் பேசத் தோன்றாமல் அனிதாவையே
பார்க்க, அவள் தொடர்ந்தாள்.

"என்னோட சந்தோசங்களை மட்டுமே பிறரோடு
பகிர்ந்துகொள்ள ஆசைப்படறேன். என்னோட
துக்கங்கள் எனக்குள்ளேயே இருக்கட்டும்."

ஆனந்த் பெருமூச்சுவிட்டான்.

"மன்னிச்சுடுங்க அனிதா. உங்களைப் பற்றி புரிஞ்சுக்
காமே ஏதோ ஒரு வேகத்துல உங்க மேல் கோபப்
பட்டுட்டேன். உங்களுக்கு ஆட்சேபனை இல்லைன்னா
உங்களை ஒரு கேள்வி கேட்கலாமா?"

"உம்... கேளுங்க."

"இவ்வளவு இளமையா... அழகா இருக்கிற நீங்கள் எப்படி
யதான ஒருத்தருக்கு வாழ்க்கைப்பட்டீங்க?"

அனிதா தவிப்பாய் வாசலைப் பார்த்துவிட்டு ஆனந்தை
றிட்டாள். "இன்னொரு நாளைக்கு சொல்றேனே...?"

"ஏன் இன்னிக்கு என்ன?"

"வெளியூர் போயிருக்கிற அவர் திரும்பற நேரம் இது.
ந்த நிமிடத்திலும் வரலாம்..."

"ஏன்... வந்தால் என்ன?"

"மன்னிக்கணும் மிஸ்டர் ஆனந்த்! அந்நிய ஆண்களோடு
ன் பேசறதை அவர் விரும்பமாட்டார். நேற்றைக்கு உங்கள்
ாரில் என்னை இங்கே கொண்டுவந்து விட்டுட்டு
ானதுக்கே கண்டபடி சத்தம் போட்டார். மனிதருக்கு
ாபம் வந்துட்டா அவ்வளவுதான்... கையில எது

கிடைச்சாலும் சரி அதாலேயே அடிப்பார்."

ஆனந்த் திடுக்கிட்டான்.

"இப்படியும் ஒரு மனிதனா?"

"அவரைப் பற்றி நல்லதா சொல்றதுக்கு எதுவுமே இல்லை. சின்ன வயசிலிருந்தே குடிப்பழக்கம் உண்டு. பிற பெண்களோடு சகவாசமும் உண்டு. அவருக்கு புத்தி சொல்ற மாதிரி ஏதாவது பேச ஆரம்பிச்சா சிகரெட்டை பத்தவைச்சு சூடு போடுவார்."

"அனிதா இந்த நரகத்துல எப்படி வாழ்ந்துட்டிருக்கீங்க?"

"என்ன செய்யறது? வாழ்ந்தாகணுமே..." சொன்ன அனிதா ஒரு பெருமூச்சை விட்டுவிட்டு மெல்லிய குரலில் கேட்டாள்.

"முதல் தடவையா வீட்டுக்கு வந்திருக்கீங்க. என்ன சாப்பிடுறீங்க... காபி டீ இல்லேன்னா கூல்ட்ரிங்க்?"

"நான் எதுவும் இப்போது சாப்பிடற மூடில் இல்லை அனிதா. நான் கிளம்பறேன். எனக்கு மனசு சரியில்லை..."

"ஆனந்த்..."

"உம்..."

"என் மேல உங்களுக்கு கோபம் இல்லையே?"

"கொஞ்சம் கூட இல்லை. எனக்கு இருக்கிற ஆச்சரியமெல்லாம் இது ஒன்னுதான். ஒரு புத்திசாலி மாதிரி பேசற நீங்க ஒரு வயசான ஆளுக்குப் போய் எப்படி வாழ்க்கைப்பட்டீங்க?"

"வரதட்சணை நிறைய கொடுத்து ஒரு நல்லவனுக்கு கல்யாணம் பண்ணித் தர கையாலாகாத என்னோட அப்பாவும் அம்மாவும் எனக்கு நல்லது பண்றதா நினைச்சு இந்தப் படுகுழியில் என்னைத் தள்ளிட்டாங்க. பணம்



எக்கச்சக்கமா கொழிக்கிற ஒரு வசதியான இடத்துல வாழ்க்கைப்பட்டுட்டா ஒரு பொண்ணுக்கு எல்லா சந்தோசங்களும் கிடைச்சுடும்ங்கிறது அவங்க நினைப்பு. இவர் வயசானவரா இருந்தாலும் பரவாயில்லை. ஒரு சாடிஸ்ட் மாதிரி இருக்காரே... எந்த நேரத்துல எப்படி நடந்துக்குவார்ன்னே சொல்லமுடியாது. சிரிச்சு பேசிட்டே இருப்பார்... சிகரெட் சாம்பலை என் முகத்துல தட்டுவார். திடீர்னு தொப்புளில் சூடு வைப்பார்... நான் அலறித் துடிக்கிறதைப் பார்த்துட்டு சிரிப்பார்..."

"இப்பேர்ப்பட்ட ஒரு ஆள்கூட சேர்ந்து வாழத்தான் வேண்டுமா... பேசாமே உங்க அம்மாகிட்டயே போயிடலாமே?"

"அவங்க இப்போ உயிரோடு இல்லை. என் கல்யாணம் முடிஞ்ச ஆறு மாசத்துக்குள்ளேயே அப்பா ஹார்ட் அட்டாக்ல போயிட்டார். அப்பா இறந்த அதிர்ச்சியில் அம்மா அடுத்த மூணு மாசத்துக்குள்ளேயே போய் சேர்ந்துட்டாங்க. எனக்கு இப்போ இந்த உலகத்தில் இருக்கிற ஒரே ஒரு உறவு இவர் ஒருத்தர் மட்டும்தான். மாசத்துல பாதி நாள் வெளியூர் போயிடுவார். காலையில் கொச்சிக்கு விமானத்தில் கிளம்பிப் போனார். சாயந்தர விமானத்துல வந்துடறதா சொன்னார். எந்த நேரத்திலும் அவர் வந்துடலாம்..."

"உங்க தவிப்பு எனக்கு புரியுது அனிதா. நான் கிளம்பறேன். என்னால உங்களுக்கு ஒரு பிரச்சினையும் வராது. உங்கள் குடும்ப வாழ்க்கை சந்தோசமா அமைய என் வாழ்த்துக்கள்."

ஆனந்த் சொல்லிவிட்டு நகர முயன்ற விநாடி—

வெளியே—

அந்த கார் சத்தம் கேட்டது.

சன்னல் வழியாக எட்டிப் பார்த்த அனிதா கைகளை

உதறிக்கொண்டு பதறினாள்.

"அய்யய்யோ..."

"என்னங்க அனிதா?"

"அவர் வந்துட்டார்..."

## 7

ஆனந்த் அவஸ்தையாய் எச்சில் விழுங்கினான்.

"இ... இப்ப என்ன பண்றது?"

"ஆனந்த்! உங்களையும் என்னையும் இந்த நிலைமையில் பார்த்தால் அவருக்கு கோபம் வரும். அந்த கோபத்தை உங்க முன்னாடி காட்டிக்க மாட்டார். ஆனால் நீங்கள் புறப்பட்டு போனதும் அவரோட மூர்க்கமான கோபம் என் மேல திரும்பும்... அந்தக் கோபத்தை என்னால தாங்கிக்க முடியாது..."

"நான் பக்கத்து அறையில் போய் ஒளிஞ்சிக்கட்டுமா?"

"வேற வழியில்லை. பக்கத்து அறைக்குள்ளே பாத்ரூம் இருக்கு. பாத்ரூமுக்குள்ளே போய் பத்து நிமிடம் இருங்க... அவர் அவரோட அறைக்குப் போனதும் நீங்க மெதுவா கிளம்பிப் போயிடலாம்..."

போர்டிகோவில் கார் நிற்கும் சத்தம் இப்போது இரைச்சலாய் கேட்டது. அனிதா அவசரப்படுத்தினாள்.

"ஆனந்த் சீக்கிரமா அறைக்குள்ளே போங்க."

ஆனந்த் வேகவேகமாய் பக்கத்து அறைக்குள் நுழைந்து குளியலறைக்குள் புகுந்து கதவைத் தாழிட்டுக்கொண்டான். இதயம் பய இரத்தத்தை துரித கதியில் இறைக்க ஆரம்பித்தது.



சாவி துவாரத்தில் கண் வைத்துப் பார்த்தான். அறை தெரிந்தது.

பங்களாவில் சில நிமிடங்களுக்கு நிசப்தம்.

பிறகு–

அனிதாவின் பேச்சுக் குரல் கேட்டது.

"அஞ்சு மணிக்கே வர்றதா சொல்லிட்டு போனீங்க?"

"விமானம் தாமதமாயிட்டுது. ஏதோ வெடிகுண்டு புரளி" அனிதாவின் கணவர் பாலகங்காதரன் சொல்லிக் கொண்டே அறை சோபாவில் உட்கார்ந்து– கழுத்தை இறுக்கியிருந்த டையின் முடிச்சைத் தளர்த்தினார்.

அனிதா பக்கத்தில் உட்கார்ந்தபடி கேட்டாள்.

"காபி கொண்டுவரட்டுமா?"

"வேண்டாம். வேர்த்து வடியுது. எனக்கு குளிர்ந்த தண்ணீர் வேணும்."

"சரி வாங்க. மாடியில் இருக்கிற உங்கள் அறைக்குப் போயிடுவோம்..."

"ஏன்... இங்கேயே உட்கார்ந்தா கொண்டுட்டு வரமாட்டியா?"

"இதோ கொண்டுவர்றேன்" புறங்கழுத்து வியர்வையை மேலே போட்டிருந்த துப்பட்டாவால் ஒற்றிக்கொண்டு உள்ளே இருந்த குளிர்சாதனப் பெட்டியை நோக்கிப் போனாள் அனிதா.

குளிர்சாதனப் பெட்டியைத் திறந்து குளிர்ந்த தண்ணீர் பாட்டிலை எடுத்துக்கொண்டு திரும்பியபோது– பாலகங்காதரன் ஒரு சிகரெட்டை பற்றவைக்கும் முயற்சியில் இருந்தார்.

குளிர்ந்த தண்ணீர் பாட்டிலை நீட்டினாள். அவர் நிமிர்ந்து பார்க்காமல் சொன்னார்: "அப்படி வைச்சுட்டு

என் பக்கத்துல வந்து உட்கார்."

அனிதா பாட்டிலை டீபாயின் மேல் வைத்துவிட்டு மெல்ல உட்கார்ந்தாள்.

பாலகங்காதரன் தன் வழுக்கைத் தலையை இடது கை விரல்களில் தடவிக்கொண்டே கேட்டார்.

"நேத்திக்கு ஒருத்தன் உன்னைக் காரில் கொண்டுவந்து விட்டுட்டு போனானே... அவன் பெயர் என்ன?"

"ஆ... ஆனந்த்..."

பாலகங்காதரன் சிகரெட் புகையை அனிதாவின் முகத்தில் விட்டார். "அந்த ஆனந்த் மறுபடியும் இங்கே வந்தானா?"

"இ... இல்லையே..."

"அவனோட கார் மாருதிதானே?"

"ஆ... ஆமா..."

"காரோட நிறம் நீலம்...?"

"ஆ... ஆமா..."

"எண் 4577...?"

"ஆ... ஆமா..."

"அந்தக் கார்... நம்ம தெருமுனையில் ஒரு மரத்துக்கு கீழே நின்னுட்டிருக்கு..."

அனிதா வியர்த்தாள்.

"அ... அவர்... வேற... யாரையாவது... இங்கே பார்க்க வந்திருக்கலாமில்லையா?"

"எனக்கு அப்படித் தோணலை..."

"பின்னே?"



"அவன் உன்னைப் பார்க்கத்தான் வந்திருக்கணும்..."

அனிதா அதிர்ச்சியைக் காட்டிக்கொள்ளாமல் இயல்பான குரலில் சொன்னாள்:

"ஏன் இப்படியெல்லாம் பேசறீங்க... நேத்திக்கு அவரோட காரில் வந்தது தப்புத்தான். இனிமேல் ஜென்மத்துக்கும் யார் காரிலேயும் லிப்ட் கேட்டு வரமாட்டேன்."

"அது இருக்கட்டும்! ஆனந்த் இன்னிக்கு உன்னைப் பார்க்க வந்தானா இல்லையா?"

"இ... இல்லைங்க!"

ஒரு நிமிடம் வரைக்கும் மவுனமாய் சிகரெட்டை புகைத்தவர் பின் குளிர்ந்த தண்ணீர் பாட்டிலை கையில் எடுத்துக்கொண்டார்.

"டிபன் ரெடியா?"

"இனிமேத்தான் பண்ணணும்."

"போய் தயார்பண்ணு. குளிச்சுட்டு வந்துடறேன்" குளிர்ந்த தண்ணீர் சாப்பிட்டுவிட்டு எழுந்து பக்கத்து அறையை நோக்கிப் போனார்.

அனிதா பதட்டமாய் குறுக்கே வந்தாள்.

"எ... என்னங்க?"

"என்ன?"

"இந்த அறையிலேயா குளிக்கப் போறீங்க?"

"ஆமா."

"இ... இந்த குளியலறையில் த... தண்ணி... வர்றது இல்லைங்க."

"ஏன்?"

"என்னன்னு தெரியலை... பிளம்பரைக் கூப்பிட்டுக் காட்டணும். நீங்கள் மாடி அறைக்குப் போய் குளிச்சிட்டு வந்துடுங்க."

"குளியலறையில் தண்ணி வரலையா? இதுக்குப் போய் பிளம்பரை ஏன் கூப்பிடணும்... என்னாச்சுன்னு நானே பார்த்துடறேன்."

பாலகங்காதரன் அந்த அறைக்குள் நுழைந்து குளியலறையை நோக்கி வேகமாய் போக அனிதா பதட்டமாய்க் கத்தினாள்.

"அங்கே போகாதீங்க..."

அவளுடைய கத்தலைப் பொருட்படுத்தாமல் குளியலறை கதவை நெருங்கி தாழ்ப்பாள் கைப்பிடியைப் பற்றி இழுத்தார்.

கதவு உட்பக்கம் தாழிடப்பட்டிருந்தது.

இழுத்துப் பார்த்துவிட்டு— அனிதாவை கோபம் கொப்பளிக்கும் கண்களோடு பார்த்தார்.

"உள்ளே யாரு?"

"யா... யா... யாரும் இல்லீங்க..."

"யாரும் இல்லாமே உட்பக்கம் எப்படி தாழ் போட்டிருக்கும்?"

"தானாய்தான் விழுந்திருக்கும்..."

பாலகங்காதரன் கபடமாய் அவளைப் பார்த்து சிரித்தார். "என்னை முட்டாளாக்கப் பார்க்கிறாயா? உள்ளே யார் இருக்கான்னு நீ சொல்றியா... இல்லே உள்ளே இருக்கிறவனை வெளியே நானே வரவழைக்கட்டுமா?"

"உ... உள்ளே... யாரும் இல்லைங்க. நான் சொல்றதை..."

அனிதா சொல்லிக்கொண்டிருக்கும் போதே—



பாலகங்காதரன் அறையில் இருந்த பீரோவை நெருங்கி— படீரென்று திறந்து துணிமணிகளைக் கலைத்து— அவைகளுக்கு அடியில் இருந்த கைத்துப்பாக்கியை கையில் எடுத்துக்கொண்டார்.

அவர் கையில் இருந்த கைத்துப்பாக்கியைப் பார்த்ததும் அனிதாவின் பெரிய விழிகள் பயத்தில் உறைந்துபோயின. நாக்குழறி கத்தினாள்.

"துப்பாக்கியை மொதல்ல உள்ளே வையுங்க."

"குளியலறைக்குள்ளே யார் இருக்கான்னு சொல்லு."

"அது... வந்து... வந்து..."

"உம்... சொல்லு."

"ஆனந்த்...."

பாலகங்காதரன் முகம் சிவந்தார். "எனக்குத் தெரியும்... அவனோட காரை தெருமுனையில் பார்த்தபோதே எனக்குத் தெரியும். எத்தனை நாளா இந்த திருட்டுத்தனம் நடக்குது?"

அனிதா குறுக்கிட்டு பதைபதைப்போடு சொன்னாள்.

"நீங்கள் நினைக்கிற மாதிரி எங்களுக்குள்ளே எந்த தப்பான தொடர்பும் இல்லீங்க. அவர் ஏதேச்சையா என்னைப் பார்க்க வந்தார்."

"அப்படி பார்க்க வந்தவன் அறைக்குள்ளதான் உட்கார்ந்து இருக்கணும். குளியறைக்குள்ளே எதுக்காக ஒளிஞ்சுட்டு இருக்கான்?"

"பிளக்..."

குளியலறை கதவு திறந்துகொள்ள வியர்த்த முகமாய் ஆனந்த் வெளிப்பட்டான். பாலகங்காதரனின் பார்வை அவன் பக்கம் திரும்பியது.

# 8

சீறினார்.

"எவளாவது ஒருத்தி கண்ணுக்கு இலட்சணமா இருந்துட்டா போதும்... அவள் கழுத்துல தாலி இருக்கா இல்லையன்னுகூட பார்க்காமே காரை எடுத்துட்டு வந்துடுவீங்க...?"

ஆனந்த் கைகூப்பினான்.

"சார்... என் மீது எந்த தப்பும் இல்லை... நீங்கள் நினைக்கிற மாதிரி எங்களுக்குள்ளே... எந்தவிதமான தப்பான உறவும் கிடையாது."

"எங்களுக்குள்ளே பவித்திரமான உறவு இருக்குன்னு காட்டறதுக்காகத்தான் . குளியலறைக்குள்ளே ஒளிஞ்சிட்டிருந்தியா?"

"சார்..."

"டேய்... உன்கிட்ட எனக்கென்னடா பேச்சு... எனக்கு துரோகம் பண்ணினவங்களை நான் உயிரோடு விடமாட்டேன். முதல் தோட்டா இவளுக்கு. இரண்டாவது தோட்டா உனக்கு..."

கையில் வைத்திருந்த துப்பாக்கியை உயர்த்தினார் பாலகங்காதரன். அனிதா குறுக்கே ஓடிவந்தாள்.

"வேண்டாங்க..."

"நீ முதல்ல செத்தொழி..." துப்பாக்கியை அனிதாவை நோக்கித் திருப்ப– ஆனந்த் அவர் மேல் பாய்ந்து– பின்புறமாய் கட்டிப்பிடித்து அவர் கையில் இருந்த துப்பாக்கியை பறிக்க முயன்றான்.



பாலகங்காதரன் ஆவேசமானார்.

"டேய்... விடுடா."

"ஆத்திரப்படாமே... நான் செல்றதைக் கேளுங்க் சார். அனிதாவோ நானோ நீங்கள் நினைக்கிற மாதிரி இல்லை."

"துரோகம் பண்ணிட்டு உபதேசமா செய்யறே? உங்கள் இரண்டு பேர் மார்பையும் சல்லடையாக்காமே நான் விடமாட்டேன்."

தன் முதுகையும்– கைகளையும் இறுக்கிப் பிடித்திருந்த ஆனந்தை உதற முயன்றார் பாலகங்காதரன்.

முடியவில்லை.

"ராஸ்கல்! விடுடா."

"சார்... கோபப்படாதீங்க."

"டேய்..."

பாலகங்காதரனின் கையில் இருந்த துப்பாக்கியை ஆனந்த் பறிக்க முயல– அவர் கோபத்தின் உச்சிக்குப் போனார்.

"உங்கள் இரண்டு பேரையும் சுட்டு பொசுக்காமே விடமாட்டேன்,.. நான் தூக்குக்கே போனாலும் சரி..."

ஆனந்த் தன் உடம்பு பலம் அனைத்தையும் திரட்டி பாலகங்காதரனின் கையில் இருந்த துப்பாக்கி வலுக்கட்டாயமாய் பறிக்க முயற்சித்த வினாடி–

கைவிரல் ட்ரிக்கரில் பட்டு– அந்த சைலன்சர் பொருத்தப்பட்ட துப்பாக்கி 'ட்டப்ப்' என்று சிறிய சத்தத்தோடு வெடித்தது.

பாலகங்காதரனின் இடது மார்பில் தோட்டா பாய்ந்திருக்க, அவர் பிளந்த வாயோடும் நிலைத்த கண்களோடும் ஒருபக்கமாய் சரிந்து விழுந்தார்.

# 9

அனிதாவும் ஆனந்த்தும் நடந்துவிட்ட விபரீதத்தில் உறைந்துபோய் நிற்க– மார்பில் இரத்தம் தெறிக்க உயிர் போவதற்காக துடித்துக்கொண்டிருந்தார் பாலகங்காதரன்.

ஆனந்த் சுதாரித்துக்கொண்டு கத்தினான்.

"அனிதா! உங்கள் குடும்ப டாக்டருக்கு போன் பண்ணி உடனே அவரை வரச்சொல்லுங்க."

அனிதா தொலைபேசியை நோக்கி ஓடினாள். ரிசீவரை கையில் எடுத்துக்கொண்டு எண்களைத் தட்டினாள்.

ஆனந்த் பக்கத்தில் ஓடிவந்தான்.

"சீக்கிரம் அனிதா..."

"மறுமுனையில் பேசிக்கொண்டிருக்கிறதை காட்டு வதற்கான சத்தம் கேட்குது. அந்த டாக்டர் எப்பவுமே பிசியாத்தான் இருப்பார்."

"டாக்டர் வீடு எங்கே?"

"நார்திட்ரன் ரோடு."

"அவரை டாக்டர்கிட்டே கொண்டுபோயிடலாம். உடனடியா கொண்டுபோனா... டாக்டர் ஏதாவது பண்ணி காப்பாத்திடுவார்."

இருவரும் பாலகங்காதரனை நெருங்கினார்கள். மொசைக்தரையை இரத்தத்தால் நனைத்துக்கொண்டிருந்த அவருடைய உடலில் துடிப்பு கொஞ்சம் கொஞ்சமாய் அடங்குவது தெரிந்தது.

"அனிதா! நீங்கள் அவரோட காலமாட்டை பிடிங்க. நான் தலைமாட்டைப் பிடிக்கிறேன். போர்டிகோவில்



நிற்கிற காருக்கு கொண்டுபோயிடலாம்..."

அனிதா கணவரின் கால்களைப் பிடித்துக்கொள்ள முயற்சித்த விநாடி–

அவருடைய தலை சாய்ந்தது.

ஆனந்த் உடைந்துபோய் அப்படியே முழந்தாளிட்டு உட்கார்ந்தான். முகம் ஒருவித இறுக்கத்துக்கு உட்பட்டிருக்க– உடம்பு வியர்த்து கொட்டியது. அனிதா இருண்டு கைகளாலும் தலையைப் பற்றிக்கொண்டு கண்களில் நீரோடு சுவருக்கு சாய்ந்து உட்கார்ந்தாள்.

அறைக்குள் ஒரு ஐந்து நிமிடத்திற்கு வேண்டாத நிசப்தம். பின்– ஆனந்த் தொண்டையை மெல்லக் கனைத்தான்.

"அ... னி... தா..."

"உம்..."

அவள் கலக்கமாய் நிமிர்ந்தாள்.

"இப்ப என்ன பண்றது?"

"ஆனந்த்! நீங்கள் இந்த இடத்தைவிட்டு உடனே போயிடுங்க."

"நான் போயிட்டா... இந்த பிரச்சினையை எப்படி சமாளிப்பே?"

"போலீசுக்கு போன் பண்ணி அவங்க வந்ததும் யாரோ அடையாளம் தெரியாத இரண்டு பேர் திடீர்ன்னு வீட்டுக்குள்ளே நுழைஞ்சு என் கணவரை துப்பாக்கியால சுட்டுட்டு ஓடிப்போயிட்டாங்கன்னு சொல்லிடறேன்."

"நீங்க சொல்றதை போலீஸ் நம்பமாட்டாங்க அனிதா. கேசை பல கோணத்திலிருந்து பார்ப்பாங்க. வயதான

அவருக்கு நீங்கள் ரெண்டாவது மனைவி. அழகோடும் இளமையோடும் இருக்கிற உங்களுக்கு வேற யார் கிட்டயாவது பழக்கம் உண்டான்னு விசாரிச்சு பார்ப்பாங்க... நீங்கள் என்னோட ஆபீசுக்கு வந்து என்கிட்ட பேசிட்டு போனதை– ஆபீஸ்ல வேலை பார்க்கிற அத்தனை பேரும் பார்த்திருக்காங்க... போலீஸ் என்னை மோப்பம் பிடிக்கிறதுக்கு ரொம்ப நேரம் ஆயிடாது..."

"வேற என்ன பண்றது ஆனந்த்?"

"யோசிக்கணும்."

"ஆனந்த்! நீங்கள் என் வீட்டுக்கு வந்த நேரம் சரியில்லை. என்னால உங்களுக்கு எவ்வளவு..."

"அனிதா! பேசிட்டிருக்க நேரமில்லை. இது கொலையில்லை. ஒரு விபத்து. உங்கள் கணவர் கையில் இருந்த துப்பாக்கியை நான் பறிக்காமே இருந்திருந்தா... இந்நேரம் நீங்களும் நானும் துப்பாக்கி தோட்டாக்களை வாங்கிட்டு உயிரை விட்டிருப்போம். ஆனால், போலீஸ்ல இந்த வாதத்தை சொன்னா ஒத்துக்கமாட்டாங்க... நீங்களும் நானும் திட்டம் போட்டுத்தான் இந்தக் கொலையை பண்ணியிருக்கிறதா நினைப்பாங்க..."

அனிதா குரல் தழுதழுத்தாள். "ஆனந்த்! என்னைப் பொறுத்தவரைக்கும் செத்துப்போனது என் கணவர் இல்லை. ஒரு மிருகம். என்னை அணு-அணுவா சித்ரவதை பண்ணின காட்டுமிராண்டி. இந்த மிருகத்தை ஒரு போர்வையால சுத்தி– கார்ல போட்டுகிட்டு போய்– எங்கேயாவது கண்காணாத இடத்துக்கு கொண்டுபோய் பெட்ரோலை ஊத்தி கொளுத்திட்டு கமுக்கமா இருந்துட்டா என்ன?"

ஆனந்த் நிமிர்ந்தான்.



"அனிதா! நீங்கள் என்ன சொல்றீங்க?"

"இனிமே செய்யவேண்டியதை சொல்றேன் ஆனந்த்."

"பிணத்தை எங்கேயாவது கண்காணாத இடத்துக்கு கொண்டுபோய் பெட்ரோலை ஊற்றி கொளுத்திட்டாலும் பிரச்சினை தீர்ந்துடாதே... உங்கள் கணவர் எங்கேன்னு யாராவது கேட்டால் நீங்கள் என்ன பதில் சொல்வீங்க..."

"கைவசம் பதில் இருக்கு."

"என்ன?"

"என் கணவர் அடிக்கடி வெளியூர் போகிற ஆசாமி. சில சமயங்கள்ல வாரம் பத்துநாள் வரைக்கும்கூட வராமே இருப்பார். இந்த ஒரு விசயத்தை பயன்படுத்திக்க வேண்டியதுதான்..."

"எப்படி?"

அனிதா சற்றே தெளிந்த முகத்தோடு ஆனந்தை ஏறிட்டாள். "ஆனந்த்! இந்த நிலைமையில் விசயத்தை போலீசுக்கு கொண்டுபோகவே முடியாது. பிரச்சினையில் இருந்து விடுபட பிணத்தை யாருக்கும் தெரியாமல் அழிக்கிறதுதான் சரி... பிணத்தை அழிச்சுட்டு ஒரு ரெண்டு வாரம் கழிச்சு டெல்லிக்கு போறேன்னு கிளம்பின என்னோட கணவர், திரும்பி வரலைன்னு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் புகார் கொடுப்பேன். போலீஸ் டெல்லிக்குப் போய் தேடட்டுமே..."

"உங்கள் மேல சந்தேகப்படமாட்டாங்களா?"

"என் மேல சந்தேகப்பட எந்த முகாந்திரமும் இல்லை ஆனந்த். அப்படியே சந்தேகப்பட்டாலும் சாதுர்யமான பதில்களைச் சொல்லி அதிலிருந்து என்னால் கழண்டு

கொள்ள முடியும். இப்ப இருக்கிற என்னோட கவலையெல்லாம் நீங்கள் இந்தக் கொலைப் பழியில் மாட்டிக்க கூடாதுங்கிறதுதான்."

"அனிதா! பிணத்தை அழிக்கிறது அவ்வளவு சுலபம் இல்லையே..."

"கஷ்டம்தான்! ஆனால் போலீஸ் பிடியிலிருந்து நீங்களும் நானும் தப்பணும்ன்னா, பிணத்தை அழிச்சுத்தான் ஆகணும். பிணத்தை ஒரு போர்வையால சுத்தி– காரோட பின்சீட்டுக்கு கீழே போட்டுகிட்டு சென்னை நகரோட எல்லையைத் தாண்டிட்டா போதும். ஆள் நடமாட்டம் இல்லாத ஏதாவது ஒரு பொட்டல்வெளியில் பிணத்தை கிடத்தி பெட்ரோலை ஊற்றி சாம்பலாக்கிட்டு வந்துடலாம். இருட்டிட்டு வர்ற இந்த சாயந்தர நேரமும் நமக்கு சாதகமாத்தான் இருக்கு."

இரண்டு நிமிட யோசனைக்குப் பின் ஆனந்த் தலையாட்டினான். உதடுகள் "சரி" என்ற ஒற்றைச் சொல்லை பயமாய் உச்சரித்தது.

அனிதா உள்ளே போய்– அந்த சிவப்பு நிற போர்வையைக் கொண்டுவந்து விரித்தாள். இருவரும் பாலகங்காதரனின் இரத்தம்தோய்ந்த உடலைத் தூக்கி போர்வையில் கிடத்தி ஒரு மூட்டை மாதிரி கட்டினார்கள்.

வெளியே யாரும் இல்லை என்று உறுதி செய்து கொண்டதும்– உடலைச் சுற்றியிருந்த மூட்டையைத் தூக்கிக்கொண்டு போர்டிகோவில் நின்றிருந்த காரை நோக்கிப் போனார்கள்.

வெளியே இருட்டியிருந்தது.

காரின் பின்பக்கக் கதவைத் திறந்து– பின்சீட்டுக்கு கீழே



போர்வை மூட்டையைத் திணித்தார்கள்.

அனிதா வீட்டைப் பூட்டிக்கொண்டபின் காரின் முன் இருக்கைக்கு வந்தாள்.

"ஆனந்த்! காரை நான் ஓட்றேன். நீங்கள் பக்கவாட்டு கண்ணாடிகளை ஏற்றிவிட்டுட்டு– பின்னேயே இருங்க. நெடுஞ்சாலைக்கு போனதும்– ஏதாவது ஒரு பெட்ரோல் பங்க்ல கேன்ல பெட்ரோல் வாங்கிக்கலாம்..."

## 10

**கா**ர் அம்பத்தூரைத் தாண்டி ஆவடி போகும் ரோட்டில் நிதானமான வேகத்தில் போய்க்கொண்டிருந்தது. ஆனந்தைக் காட்டிலும் அனிதா இப்போது அதிகப்படியான பதட்டத்தில் இருந்தாள். வியர்த்து வழிகின்ற முகத்தை துடைக்கக்கூட தோன்றாமல் காரை விரட்டிக்கொண்டிருந்தாள்.

"ஆனந்த்... இப்ப மணி என்ன?"

"எட்டரை."

"ஆவடியைத் தாண்டியதுமே பொட்டல்வெளி நிறைய வரும். ஆள் நடமாட்டம் அறவே இல்லாத இடத்தில் காரியத்தைப் பண்ணிடுவோம்."

"பெட்ரோல் வாங்கணுமே..."

"வழியில் ஏதாவது பெட்ரோல் பங்க் இருக்கான்னு பார்க்கணும்."

"இதே ரோட்ல இன்னும் கொஞ்ச தூரம் போனா ஒரு பெட்ரோல் பங்க் வரும். அங்கே பெட்ரோல் வாங்கிக்கலாம்" ஆனந்த் சொல்ல, அனிதா அவனை திரும்பிப் பார்த்தாள்.

"ஆனந்த்! பெட்ரோல் வாங்கும்போது கொஞ்சம் எச்சரிக்கையா இருக்கணும்... காரை பெட்ரோல் பங்குள்ளே கொண்டுட்டு போயிடக்கூடாது. நாளைக்கு ஏதாவது ஒரு பிரச்சினைன்னா கார் எண் காட்டிக் கொடுத்துடும்..."

"பின்னே பெட்ரோல் எப்படி வாங்கறது?"

"பெட்ரோல் பங்க் வர்றதுக்கு முந்தியே நூறு மீட்டர் தள்ளி நான் காரை நிறுத்திக்கிறேன். நீங்கள் கேன் எடுத்துட்டு போய் பெட்ரோல் வாங்கிட்டு வந்துடுங்க..."

ஆனந்த் தலையாட்டினான்.

கார் மிதமான வேகத்தில் ரோட்டை அரைத்தது. சுற்றிலும் இருட்டு. காரின் முன்விளக்குகள் மட்டும் சாலையை வெளிச்சப் பட்டையாய்க் காட்டியது.

இரண்டு நிமிட பயணத்துக்குப் பின்– ஆனந்த் மெல்லிய குரலில் சொன்னான். "அனிதா! காரை ஓரம்ா நிறுத்திக்குங்க. தூரத்துல ஒரு விளக்கு தெரியுதே அதுதான் பெட்ரோல் பங்க். நான் போய் பெட்ரோல் வாங்கிட்டு வந்துடறேன்."

அனிதா காரை ரோட்டோரமாய் நிறுத்த– ஆனந்த் கீழே இறங்கி காரின் டிக்கியைத் திறந்து– பத்து லிட்டர் கொள்ளளவு கொண்ட கேனை எடுத்துக்கொண்டு பெட்ரோல் பங்கை நோக்கி நடந்தான்.

"ஆனந்த்! லேட் பண்ணிடாமே சீக்கிரமா வந்துடுங்க.





பிணத்தோடு இருக்க பயமாயிருக்கு...

"சீக்கிரமா வந்துடறேன்."

ஆனந்த் நூறு மீட்டர் தூரம் தள்ளியிருந்த அந்த பெட்ரோல் பங்க்கை நோக்கி வேகவேகமாய் நடந்தான்.

## 11

சரியாய் பதினைந்து நிமிடம்!

பெட்ரோல் கேனோடு திரும்பி வந்தான் ஆனந்த். அனிதா காரினின்றும் கீழே இறங்கி– தவிப்பாய் நின்றுகொண்டிருந்தாள். வியர்வை முகம்.

"என்ன ஆனந்த்... பெட்ரோல் வாங்கறதுல எந்த பிரச்சினையும் வரலையே?"

"எந்த பிரச்சினையும் வரலை. பெட்ரோல் போடற ஆளே 'ஏன் சார் பெட்ரோல் இல்லாமே கார் வழியில நின்னுடுச்சான்னு கேட்டான். நான் ஆமான்னுட்டேன்."

"சரி, கிளம்பலாமா?"

"உம்..."

ஆனந்த் பெட்ரோல் கேனோடு காரின் பின்சீட்டில் ஏறி உட்கார– அனிதா முன் இருக்கையில் ஆக்கிரமித்து காரை விரட்டினாள்.

வேகமான பயணம்.



கார் வெளிச்சமான ஆவடியைக் கடந்து– இருட்டான நெடுஞ்சாலை ரோட்டுக்கு வந்தது. ரோட்டின் இரண்டு பக்கமும் பொட்டல்வெளி. எங்கோ ஒரு பனை மரம் கறுப்பாய் அசைந்தது.

"அனிதா!"

"உம்..."

"இந்த இடம் வசதியா இருக்கும்னு நினைக்கிறேன்."

"இன்னும் கொஞ்சம் உள்ளே போயிடலாம். இது எரிக்கிற விசயம். யாரும் பார்த்துடக் கூடாது..."

மேலும் ஐந்து கிலோ மீட்டர் பயணம்.

ரோட்டின் இடுப்பிலிருந்து ஒரு மண் பாதை பிரிந்து பொட்டல்வெளிக்கு போக– அனிதா காரை அந்த மண் பாதையில் நுழைத்தாள்.

கார் குலுங்கியது. சில நிமிட பயணத்திற்குப் பின் நின்றது.

"ஆனந்த்! இந்த இடத்துல தகனம் பண்ணிடலாம்."

ஆனந்த் இறங்கி சுற்றும் முற்றும் பார்த்தான். இருட்டில் கருவேல முட்செடிகள் தெரிந்தன.

அனிதா காரின் முகப்பு விளக்குகளை அணைத்தாள். இறங்கினாள். இருவருமாய் சேர்ந்து காரின் பின்சீட்டுக்கு அடியில் திணித்திருந்த பாலகங்காதரனின் உடல் இருந்த போர்வை மூட்டையை வெளியே இழுத்து– கருவேல முட்செடிகளுக்கு மத்தியில் போட்டு பத்து லிட்டர் பெட்ரோலையும் ஊற்றி நனைத்தார்கள். காற்றில் பெட்ரோல் நாறியது.

'சர்ர்ரக்' தீக்குச்சி உரசப்பட்டது.

அது சுண்டி எறியப்பட்டு– போர்வை மூட்டையின் மேல் போய் விழ– அது குபீரென்று பற்றிக்கொண்டு சொக்கப்பனையாய் எரிய ஆரம்பித்தது. நெருப்பின் வெப்பம் தாளாமல் ஆனந்தும் அனிதாவும் பின்னுக்கு நகர்ந்தார்கள். இருவர் முகங்களிலும் வியர்வை பொடித்து நின்றது.

## 12

"அண்ணா...!"

விஜியின் குரல் கேட்டு– சாப்பாட்டு மேசையில் காலை உணவு சாப்பிட உட்கார்ந்திருந்த ஆனந்த் நிமிர்ந்தான்.

"ம்..."

"தட்டில் வைச்சது ரெண்டு இட்லி. பத்து நிமிட்மா சாப்பிடாமே இட்லியோட தலையையே தடவிட்டிருந்தா என்ன அர்த்தம்...?"

"ஆ...ஆபீஸ் ஞாபகம்..."

"அது மாதிரி எனக்குத் தெரியலை..."

"விஜி...! நீ... என்ன சொல்றே...?"

"ஒரு வாரமா... உன்னோட மூஞ்சி மூஞ்சி மாதிரியே இல்லை... ஆபீஸ் வேலையைப் பத்தி நீ என்னிக்குமே கவலைப்பட்டதில்லையே? என்கிட்ட சொல்லு... என்ன விசயம்...?"

"நம்பு விஜி...! ஆபீஸ்ல ஒரு புது கம்ப்யூட்டர் புரோகிராம்



செட் பண்ணினேன். அது சரியா வரலை..."

விஜி சிரித்தாள்.

"உன்னோட கைக்கு கட்டுப்படாத கம்ப்யூட்டர் இந்த உலகத்தில் இருக்கா என்ன...? நிச்சயமா இது வேற விசயம். என்கிட்ட சொல்லு..."

"படுத்தாதே... விஜி..."

"ஏதாவது காதல் விவகாரமா...?"

ஆனந்த் அவளையே பார்த்தான்.

'இவளிடம் நடந்த விசயத்தை சொல்லிவிடலாமா...?'

'வேண்டாம்... பரீட்சைக்கு படித்துக் கொண்டிருக்கிற பெண். விசயத்தைச் சொன்னால் அரண்டுபோய்'அப்செட்' ஆகிவிடுவாள்...!'

"என்னண்ணா... யோசிக்கிறே...?"

"ஒண்ணுமில்லை..."

"எனக்குத் தெரியும்..."

"என்ன...?"

"இது... காதல் விவகாரம்தான்.... அந்த அனிதாவை காதலிக்கலாம்னு நீ நினைச்சிருப்பே... அவள் வேற யாரையாவது காதலிக்கிற விசயம் தெரிஞ்சு அப்செட் ஆயிட்டியா...?"

"சேச்சே... அப்படியெல்லாம் எதுவும் இல்லை... இது முழுக்க முழுக்க ஆபீஸ் பிரச்சினை. தொண தொணன்னு பேசிட்டிருக்காமே காபியைக் கலந்து கொடு... நான் ஆபீஸ் கிளம்பணும்..."

"சரி... சரி... நான் எதையும் கேட்கலை... நீ மொதல்ல சாப்பிடு... பிளாஸ்கில் காபி கலந்து வைச்சிருக்கேன் எடுத்துக்கோ... நீ ஆபீஸ் கிளம்பறதுக்குள்ளே குளிச்சுட்டு வந்துடறேன்."

விஜி குளியலறையை நோக்கிப் போன விநாடி— அறையில் இருந்த தொலைபேசி கூப்பிட்டது.

ஆனந்த் எழுந்து போய் ரிசீவரை எடுத்தான்.

"அலோ..."

மறுமுனையில் ஆபீஸ் ஜி.எம். பேசினார்.

"ஆனந்த்...! நீங்க உடனே ஆபீஸ் புறப்பட்டு வரணும்..."

"என்ன விசயம் சார்...?"

"வாங்க... சொல்றேன்..."

ரிசீவரை வைத்துவிட்டார்.

ஆனந்த் அதிர்ந்து போயிருந்தான். 'ஜி.எம். எப்போதும் இப்படி பேசமாட்டாரே...! வாங்க... சொல்றேன்!' என்று அவர் சொன்ன அந்த வார்த்தைகளில்தான் எவ்வளவு கோபம்.

"விஜி...!"

இரைந்து கூப்பிட்டான்.

குளியறைக்குள் வெந்நீரை விளாவிக் கொண்டிருந்த விஜி வெளிப்பட்டாள்.

"என்னண்ணா...?"

"நான்... உடனே ஆபீஸ் கிளம்பணும்... ஜி.எம். போன் பண்ணினார். நீ இன்னிக்கு ஆட்டோ பிடிச்சு கல்லூரிக்குப் போயிடு..."



"சரி...! நீ சாப்பிட்டியா...?"

"எனக்கு ஒன்னும் வேண்டாம்..." ஆனந்த் அவசர அவசரமாய் உடை அணிந்துகொண்டு— போர்டிகோவில் நின்றிருந்த காருக்கு வந்தான்.

மனம் வேடந்தாங்கல் ஏரியாக மாறியிருக்க பயப் பறவைகள் ஆயிரக்கணக்கில் கத்தின.

## 13

**கா**ர் அலுவலக வளாகத்துக்குள் நுழைந்தது. நின்றது.

ஆனந்த் காரைவிட்டு இறங்கி— வேக நடையில் அலுவலகத்தில் நுழைந்து— ஜி.எம். அறைக்கு முன்பாய் நின்று சாத்தியிருந்த கதவைத் தட்டினான்.

"உள்ளே வாங்க..."

உள்ளேயிருந்து குரல் வந்ததும்— கதவைத் தள்ளிக் கொண்டு நுழைந்தான்.

ஜி.எம். பரப்பி வைக்கப்பட்ட ஏழெட்டு கோப்புகளுக்கு மத்தியில் தெரிந்தார். முகத்தில் ஒருவித கடுமை உறைந்து போயிருந்தது.

"குட்மார்னிங் சார்..."

பதிலுக்கு— அவர் குட்மார்னிங் சொல்லாமல்— எதிரில் இருந்த நாற்காலியைக் காட்டினார்.

"உட்காருங்க..."

உட்கார்ந்தான்.

ஜி.எம். ஒரு கோபப் பார்வையோடு கோப்பு ஒன்றை எடுத்து ஆனந்த் முன்னால் போட்டார்.

"அர்சவர்த்தனன் கம்பெனிக்கு ஒரு காண்ட்ராக்ட் விசயமா டெண்டர் கொடுத்தோமே... அதை கம்ப்யூட்டர்ல கொடுத்தது நீங்கதானே...?"

"ஆ...ஆமா..."

"எப்ப பண்ணினீங்க...?"

"நேத்து..."

"விலை... எவ்வளவு கொடுத்தீங்க...?"

"பனிரெண்டு இலட்சம்..."

"நிச்சயமா தெரியுமா...?"

"ஆமா சார்..."

"கம்ப்யூட்டரில் நீங்கள பதிவு பண்ணின தொகை பனிரெண்டு இலட்சம் இல்லை... இருபத்தியோரு இலட்சம்..."

"சார்... நீங்கள் என்ன சொல்றீங்க...?"

"நேத்து நீங்கள் பண்ணியிருக்கிற மகத்தான தப்பைச் சொல்றேன்... பனிரெண்டு இலட்சத்துல முடிய வேண்டிய ஒரு வியாபாரத்தை நீங்கள் பண்ணின ஒரு தப்பினால் இருபத்தியோரு இலட்சத்துக்கு போய்டுச்சு உங்களாலே கம்பெனிக்கு ஒன்பது இலட்ச ரூபாய் நஷ்டம்."

"ச...சார்... இ...இது...?"



"ஆனந்த்...! நீங்க கொஞ்ச நாளாவே சரியில்லைன்னு கேள்விப்பட்டேன். கம்பெனியின் மிக முக்கியமான காண்ட்ராக்ட் விசயத்துல பெரிய நஷ்டத்தை உண்டாக் கிட்டீங்க... விலை தப்புன்னு அர்சவர்த்தன் கம்பெனிக்கு இனிமே லெட்டர் எழுதினா அந்தக் கம்பெனிக்காரன் சிரிப்பான்."

ஆனந்தின் முகம் பூராவும் வியர்வை.

"மன்னிச்சிடுங்க சார்..."

"இது மன்னிப்பு சொல்லிட்டு போற விசயமில்லை ஆனந்த். பத்து நாளைக்கு முன்னாடிதான் கம்ப்யூட்டரில் உங்களுக்கு இருக்கிற திறமையைப் பத்தி எம்.டி.யும் நானும்... பெருமையா பேசிட்டோம். ஆனால் நேற்றைக்கு நீங்கள் பண்ணியிருக்கிற பெரிய தப்பைப் பார்க்கும்போது..."

"மன்னிச்சிடுங்க சார். கடந்த சில நாளா எனக்கு உடம்பு சரியில்லை... அதனால் வேலையில் தீவிரமா ஈடுபட முடியலை."

"உடம்பு சரியில்லைன்னா லீவு போட்டுக்க வேண்டியது தானே...? எதுக்காக ஆபீஸ் வர்றீங்க...?"

ஆனந்த் மவுனிக்க—

ஜி.எம். தொடர்ந்தார். "இந்த கம்பெனியில் யார் தப்பு பண்ணினாலும் அவங்க மேல நடவடிக்கை உண்டு. உங்கள் மேலேயும் நடவடிக்கை எடுக்கும்படியா எம்.டி. சொல்லிட்டார்."

"எந்த நடவடிக்கைக்கும் நான் தயாரா இருக்கேன் சார்."

ஜி.எம். மேசையின் இழுப்பறையைத் திறந்து பழுப்புநிற கவர் ஒன்றை எடுத்து ஆனந்திடம் நீட்டினார்.

"ம்... வாங்கிக்க..."

"சார்... இது..."

"வாங்கிப் பாருங்க..."

ஆனந்த் தயக்கமாய் வாங்கிப் பிரித்தான். பார்வை டைப் அடித்த காகிதத்தைப் பார்க்க– மூளை முழுக்க அதிர்ச்சி அலைகள் பரவியது.

தற்காலிக வேலை நீக்க நோட்டீஸ்.

"சார்..."

"மன்னிக்கனும்... இனி பேச எதுவுமே இல்லை. நீங்கள் போகலாம்..." ஜி.எம். தலைகுனிந்துகொள்ள– ஆனந்த் தளர்வாய் எழுந்தான்.

## 14

தன்னிடம் இருந்த சாவியை உபயோகப்படுத்தி– வீட்டுக் கதவில் தொங்கிய பூட்டுக்கு விடுதலை கொடுத்து உள்ளே நுழைந்தான் ஆனந்த். விஜி இனி சாயந்தரம் ஐந்து மணிக்குத்தான் கல்லூரியிலிருந்து திரும்புவாள்.

உடம்பில் ஆயாசத்தின் கனம் ஏறியிருக்க கட்டிலில் தளர்ந்து உட்கார்ந்தான் ஆனந்த்.

'இந்த வாரம் பத்து நாட்களுக்குள் வாழ்க்கையில் எவ்வளவு மாற்றம்...?'

'அனிதா வீட்டுக்கு அன்றைக்கு போனது பெரிய தப்பு...!'



'அவள் யாருக்கோ மனைவியாய் இருந்துவிட்டு போகிறாள்... எனக்கென்ன வந்தது...?'

'அதை விசாரிக்கப் போய்த்தானே இவ்வளவு பிரச்சினையும்...!'

'அனிதா இப்போது போலீசுக்கு போய் கணவரைக் காணோம் என்று புகார் கொடுத்திருப்பாளா...?'

'போன் செய்து கேட்கலாம்...!'

எழுந்து– ரிசீவரை எடுத்து– அனிதாவின் தொலைபேசி எண்களை தட்டினான்.

மறுமுனையில் ரிங் போய் ரிசீவர் எடுக்கப்பட்டு அனிதாவின் பலவீனமான "அலோ" குரல் கேட்டது.

"அனிதா! நான் ஆனந்த் பேசறேன்... அங்கே ஏதும் பிரச்சினை இல்லையே...?"

"இதுவரைக்கும் இல்லை ஆனந்த். டெல்லிக்கு போறேன்னு கிளம்பிப்போன கணவர்கிட்டயிருந்து எந்தத் தகவலும் வரலைன்னு எங்க குடும்ப டாக்டர்கிட்ட சொல்லியிருக்கேன்... இன்னும் நாலைஞ்சு நாள் பார்த்துட்டு போலீஸ்ல புகார் கொடுத்துடலாம். அந்தப் பிரச்சினையை நானே பார்த்துக்கிறேன் ஆனந்த். நீங்கள் என்னை பார்க்க வர்றதோ போன்ல பேசறதோ வேண்டாம்... ஆமா... நீங்கள் இன்னிக்கு ஆபீஸ் போகலையா...?"

"போனேன்... வந்துட்டேன்..."

"ஏன்...?"

"மனசு சரியில்லை... கொஞ்ச நாள் லீவு போட்டுட்டேன்..."

"ஆனந்த்! நீங்கள் மனசைப் போட்டு குழப்பிக்க

வேண்டாம்... நீங்கள் எந்த தப்பும் பண்ணலை... என் கணவர் பண்ணின தப்புகளுக்கு அவரோட துப்பாக்கியே அவருக்கு எமனாயிடுச்சு... இப்போ என் முன்னாடி இருக்கிற பிரச்சினையெல்லாம்... இந்த கேசை எப்படி திசை திருப்பி போலீசை நம்ப வைக்கறதுங்கிறதுதான்... வியாபாரத்தில் என் கணவருக்கு எத்தனையோ எதிரிகள் உண்டு.. அவங்க பக்கம் போலீசோட சந்தேகத்தை திருப்ப முடியும்ன்னு நான் நினைக்கிறேன்."

"அனிதா! இந்த விசயத்துல நீங்கள் எச்சரிக்கையா செயல்படணும்..."

"என்னைப்பற்றி நீங்கள் கவலையேபடாதிங்க ஆனந்த். ஒரு மிருகத்துகிட்டேயிருந்து தப்பிச்சுட்ட உணர்வு இப்போ என் மனசுக்குள்ளே இருக்கு."

"போலீசோட விசாரணையை உங்களாலே சமாளிக்க முடியுமா...?"

"என்னால முடியும்...! நீங்கள் மட்டும் எந்தக் காரணத்துக்காகவும் என்னைப் பார்க்க என் வீட்டுக்கு வந்துடாதிங்க... ஏதாவது முக்கியமான விசயம் இருந்தால் நானே உங்களுக்கு போன் பண்றேன்..."

அனிதா மறுமுனையில் ரிசீவரை வைத்துவிட ஆனந்தும் ரிசீவரை வைத்துவிட்டு பக்கத்தில் இருந்த நாற்காலிக்கு சாய்ந்து நெற்றியைப் பிடித்துக்கொண்டான்.

'அனிதாவால் பிரச்சினையை சமாளிக்க முடியுமா?'

'போலீசார் விசாரணையை தீவிரப்படுத்தி உண்மைகளை கண்டுபிடித்துவிட்டால்...?'

நினைக்கும்போதே ஆனந்தின் நரம்பு மண்டலத்தை



மின்சாரம் தாக்கியது போன்ற உணர்வில் அவன் சில்லிட்டு போனான்.

## 15

**விஜி** கல்லூரியிலிருந்து திரும்பியபோது சாயந்தரம் ஐந்து மணி. சன்னலுக்குப் பக்கத்தில் நாற்காலியைப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்த ஆனந்தை நெருங்கி னாள்.

"என்னண்ணா... இன்னிக்கு ஆபீசிலிருந்து சீக்கிரமாவே வந்துட்டே போலிருக்கு..."

"உம்..."

"காப்பி கலந்து தரட்டுமா?"

"வேண்டாம்."

"சூடா கலந்துட்டு வர்றேன். குடி."

"வேண்டாம்ன்னா விடேன்..."

விஜி ஆனந்துக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள். "நீ ஏன் இப்படி இருக்கேன்னு எனக்குத் தெரியும்..."

ஆனந்த் நிமிர்ந்தான்.

விஜி தொடர்ந்தாள். "உன்னை வேலையிலிருந்து சஸ்பெண்ட் பண்ணிட்டதுக்காக இப்படி இடிஞ்சுபோய் உட்கார்ந்துக்கவேண்டிய அவசியம் இல்லை."

"வி... ஜி...!"

"இந்த விசயம் எனக்கு எப்படித் தெரியும்னு பார்க்கிறியா?"

"உம்..."

"இன்னிக்கு கல்லூரி நாலு மணிக்கு முடிஞ்சதும் நேரா உன்னோட ஆபீசுக்குத்தான் போனேன். அங்கே டைப்பிஸ்டா வேலை பார்க்கிற ஸ்டெல்லா எனக்கு தோழின்னு உனக்குத்தான் தெரியுமே. நீ சஸ்பெண்ட் ஆகியிருக்கிற விசயம் எனக்கு தெரிஞ்சது..."

"வி... ஜி..."

"நீ பண்ணினது பெரிய தப்புதான். அதை நிவர்த்திபண்ண அவங்க முயற்சி எடுத்திருக்கலாம். அவசரப்பட்டு ஜி.எம்.மோடு சேர்ந்துகிட்டு எம்.டி. சஸ்பெண்ட் பண்ணியிருக்க வேண்டாம்..."

"உனக்குத் தெரியாது விஜி. கம்பெனியோட சட்ட திட்டங்கள் ரொம்பவும் கடுமையானது. நஷ்டம் அவங்களுக்கு பெரிசில்லை. நான் பண்ணின தப்புத்தான் அவங்களுக்கு பெரிசு... நான் எப்படி இப்படி ஒரு தப்பு பண்ணலாம்ங்கிறதுதான் எம். டி., ஜி. எம்.மோட ஆதங்கம்..."

"சரி, நான் உன்னை ஒரு கேள்வி கேட்கலாமா?"

"என்ன?"

"இவ்வளவு பெரிய தப்பு நேர்கிற அளவுக்கு உனக்கு கவனக்குறைவு ஏற்பட்டிருக்குன்னா, அதுக்கு காரணம் ஏதாவது இருக்கணும். உன்னோட கவனம் சிதறிப்போக என்ன காரணம்?"

"ஒண்ணுமில்லை... எப்படியோ ஏமாந்துட்டேன்."



"என்னால நம்ப முடியலை... மனசுக்குள்ளே ஏதாவது ஒரு பெரிய குழப்பம் இருந்தால் மட்டுமே அவ்வளவு பெரிய தப்பை பண்ணியிருக்க முடியும்..."

"விஜி! நீ நினைக்கிற மாதிரி பெரிய குழப்பம் எதுவும் இல்லை."

"இல்லை... நான் நம்பமாட்டேன். உன் மனசுக்குள்ளே ஏதோ பெரிய அவஸ்தை இருக்கு... கடந்த ஒரு வார காலமா நீ சரியில்லை... என்கிட்ட சிரிச்சு பேசலை. டி.வி. பார்க்கலை. பேப்பர் படிக்கலை. சரியா சாப்பிடலை..."

"விஜி... நான் நல்லாத்தான் இருக்கேன். உடம்புக்கு கொஞ்சம் முடியலை. சளித்தொல்லை... ஒற்றைத் தலைவலி!"

"கதை..."

"அட நம்பு."

வாசலில் அழைப்புமணி சத்தம் கேட்டது.

"யாருன்னு போய்ப் பார் விஜி."

விஜி வாசலுக்குப் போய் பார்த்துவிட்டு ஆனந்திடம வந்தாள்.

"ஜி.எம்.மோட பி.ஏ. ரகுராம் வந்திருக்கார். முன் அறை சோபாவில் உட்கார வைச்சிருக்கேன்."

ஆனந்த் எழுந்து முன் அறைக்குப் போக– சோபாவில் உட்கார்ந்திருந்த ரகுராம் எழுந்தான்.

"என்ன ரகுராம்?"

"சார்... ஜி.எம். இந்தக் கவரை உங்ககிட்ட கொடுத்துட்டு வரச் சொன்னார்..."

"கவர்ல என்ன?"

"உங்களை வேலையிலிருந்து சஸ்பெண்ட் பண்ணியிருந் தாலும் கம்பெனி விதிமுறையின்படி பாதி சம்பளம் உட்பட சில வசதிகளை நீங்கள் அனுபவிக்கலாம். அதுக்கான ஆர்டரை டைப் பண்ணி ஜி.எம். கையெழுத்து போட்டு அனுப்பியிருக்கார்."

ஆனந்த் கவரை வாங்கிக்கொண்டான்.

"நன்றி."

"சார்..."

"உம்..."

"உங்களை சஸ்பெண்ட் பண்ணினது கம்பெனி ஊழியர் களுக்கு பிடிக்கலை. வேலை நிறுத்தம் பண்ணலாமான்னு யோசிக்கறாங்க..."

"சேச்சே! அதெல்லாம் வேண்டாம். நம்ம கம்பெனி என் மேல சரியான நடவடிக்கைதான் எடுத்திருக்கு. தப்பு பண்ணினவங்க தண்டனையை அனுபவிச்சுத்தான் ஆகணும். எனக்காக யாரும் வேலை நிறுத்தம் பண்றதை நான் விரும்பலை..."

"உங்கள் நல்ல மனசுக்கு சஸ்பெண்ட் ஆர்டர் சிக்கிரமே ரத்தாகணும்னு ஆண்டவனை வேண்டிக்கிறேன் சார்" சொன்ன ரகுராம் கைகளைக் குவித்துவிட்டு வெளியேற— ஆனந்த் கனத்த மனதோடு நெற்றியைப் பிடித்துக்கொண்டு சோபாவுக்கு சரிந்தான்.

அனிதா மனசுக்குள் முனைத்தாள்.

இதயத்தின் ஒவ்வொரு செல்லிலும் வலி பரவ— ஆனந்த் கண்களை மூடிக்கொண்டான்.



# 16

மறுநாள் காலை ஒன்பது மணி.

ஆங்கில நாளிதழை பிடிப்பில்லாமல் புரட்டி பார்த்துக் கொண்டிருந்த ஆனந்துக்கு முன்பாய் வந்து நின்றாள் விஜி.

"அண்ணா..."

"உம்..."

"நான் கல்லூரிக்கு கிளம்பறேன்."

"உம்..."

"நீ வீட்ல இருப்பியா? இல்லே வெளியே எங்கேயாவது போவியா?"

"வீட்லதான் இருப்பேன்."

"சரி. பிளாஷ்கில் காப்பியும் டிபன்கேரியரில் சாப்பாடும் எடுத்து வைச்சிருக்கேன்."

"உம்..."

"மனசைப் போட்டு குழப்பிகிட்டு சாப்பிடாமே இருந்துடாதே. கேரியர்ல சாப்பாடு மிச்சம் இருந்தா... சாயந்தரம் வந்து சண்டை போடுவேன்."

ஆனந்த் ஒரு விரக்தி சிரிப்போடு தலையாட்டிவிட்டு கேட்டான்.

"நான் வேணும்னா உன்னை கல்லூரி வரைக்கும் கொண்டுவந்து காரில் விட்டுடுமா?"

"வேண்டாம். நான் ஆட்டோ பிடிச்சு போய்க்கிறேன். நீ வீட்ல இருந்து ஓய்வு எடு."

விஜி புத்தகங்களை மார்போடு அணைத்துக்கொண்டு வீட்டைவிட்டு வெளியே வந்து– தெருமுனையில் இருந்த ஆட்டோ நிறுத்தத்தில் ஆட்டோ ஒன்றை அமர்த்திக் கொண்டாள்.

"எங்கேம்மா போகணும்?"

"பாரதி நகர் எக்ஸ்டென்ஷன். ஐந்தாவது தெரு."

ஆட்டோ புறப்பட்டது.

பெட்ரோல் புகைமண்டிய–போக்குவரத்தில் பதினைந்து நிமிட பயணம்.

பாரதி நகர் விரிவாக்கம் வந்தது.

"அதோ அந்த வீடுதான்."

ஆட்டோவை நிறுத்தி இறங்கிக்கொண்டு மீட்டர் பார்த்து டிரைவருக்கு பணத்தைக் கொடுத்துவிட்டு– காம்பவுண்ட் கேட்டை திறந்தபடி போர்டிகோவை நோக்கிப் போனாள் விஜி.

படிகள் ஏறி அழைப்புமணியின் பொத்தானைத் தொட்டு அழுத்த, உள்ளே அரை நிமிட நேரத்திற்கு இன்னிசை மழை.

அனிதா கதவைத் திறந்துகொண்டு வெளிப்பட்டாள். நின்றிருந்த விஜியைப் பார்த்து– நெற்றியைச் சுருக்கினாள்.

"நீ... நீங்க...?"

"என் பெயர் விஜி. நீங்கள்தானே அனிதா?"

"ஆமா."



"நான் ஆனந்தோட தங்கை..."

அனிதா உள்ளுக்குள் திடுக்கிட்டாள். இருந்தாலும் முகத்தில் எந்தவிதமான உணர்ச்சியையும் காட்டிக் கொள்ளாமல் கேட்டாள்.

"எந்த ஆனந்த்?"

"தொலைபேசியில் ராங்க் நெம்பர் மூலமா பேசியிருக்கீங்க. என்னோட அண்ணனைக்கூட நேரில் பார்த்திருக்கீங்க..."

"ஓ... அவரா? ஆமா... ஆமா... நினைவு வருது. அவரோட தங்கையா நீங்க? செயற்கையாய் ஆச்சரியப்பட்ட அனிதா கேட்டாள்.

"இப்ப எதுக்காக வந்திருக்கீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா?"

"உள்ளே போய் பேசலாமா?"

"உம்... வாங்க."

அனிதாவின் இதயத்துடிப்பு இப்போது அதிகமாகியிருந்தது.

'இவள் எதற்காக வந்திருக்கிறாள்?'

"ஆனந்த் ஏதாவது சொல்லிவிட்டாரா?'

'அப்படி சொல்லமாட்டாரே?'

சோபா வந்தது.

"உட்காருங்க விஜி" அனிதா சோபாவைக் காட்டிவிட்டு எதிர் சோபாவில் தானும் உட்கார்ந்தாள்.

"சொல்லுங்க. என்ன விசயம்?"



"என்னோட அண்ணன் ஒரு வாரம் பத்து நாளா சரியில்லை. காரணம் கேட்டா ஒண்ணுமில்லைன்னு சொல்றார்... மனசுக்குள்ளே இருக்கிற குழப்பத்தின் காரணமா... ஆபீஸ் வேலையை குளறுபடியா பண்ணி இப்போ சஸ்பென்ஷன்ல இருக்கார்..."

"அடே...டே! எதனால அப்படி இருக்கார்?"

"அதை தெரிஞ்சுட்டு போகத்தான் உங்கள்கிட்ட வந்தேன்..."

"என்கிட்டயா...?"

"உம்..."

"அவரோட மனக் குழப்பத்துக்கு காரணம் என்னான்னு எனக்கு எப்படி தெரியும்?"

"உங்களுக்குத் தெரியும்..."

"நீங்கள் பேசறது சரியில்லை."

"நான் சரியாத்தான் பேசிட்டிருக்கேன். அண்ணனோட மனக் குழப்பத்துக்கு நீங்கதான் காரணம். இல்லேன்னா நேற்று இராத்திரி தூக்கக் கலக்கத்துல அண்ணன் 'அனிதா அனிதா'ன்னு உங்கள் பேரைச் சொல்லி புலம்பிட்டிருப்பாரா?"

அனிதா இடிந்துபோனாலும் உதட்டில் புன்னகையை ஒட்ட வைத்துக்கொண்டு போலியாய் ஆச்சரியப்பட்டாள்.

"உங்கள் அண்ணன் ஆனந்த் என்னோட பேரைச் சொல்லி தூக்கக் கலக்கத்துல புலம்பினாரா?"

"உம்..."

"நாலைஞ்சு தடவை தொலைபேசியில் பேசிப் பழக்கம்

ஒரே ஒரு தடவை ஓட்டல்ல வைச்சு உங்க அண்ணனைப் பார்த்திருக்கேன்... அவ்வளவுதான். என் பெயரை அவர் தூக்கக் கலக்கத்துல புலம்பினார்ன்னா அதுக்கு நான் என்ன செய்ய முடியும்?"

விஜி சில விநாடிகள் மவுனித்துவிட்டு பின் மெல்லிய குரலில் சொன்னாள்.

"உங்களுக்கும் என்னோட அண்ணனுக்கும் ஏதாவது காதல் விவகாரம் இருக்கும்ன்னு நினைச்சேன்."

"சேச்சே! எனக்கு கல்யாணமாயிடுச்சு."

"அ... அப்படியா...?"

"உம்..."

"இந்த விசயம் என்னோட அண்ணனுக்குத் தெரியுமா?"

"தெரியுமே. என் கழுத்துல இருக்கிற தாலிக்கொடி செயின் மாதிரி இருக்கிறதுனால ரொம்ப பேருக்கு நான் கல்யாணமானவள் என்கிற விசயம் தெரியறதில்லை. அது இருக்கட்டும். என் வீட்டு முகவரி உங்களுக்கு எப்படி தெரிஞ்சது... உங்கள் அண்ணன் சொன்னாரா?"

"இல்லை."

"பின்னே...?"

"அண்ணனுக்கு நான் இங்கே வந்ததே தெரியாது. நேற்று இராத்திரி அண்ணன் உங்கள் பேரைச் சொல்லி தூக்கக் கலக்கத்தில் உளறினதும் ஏதாவது காதல் விவகாரமாய் இருக்குமோன்னு சந்தேகப்பட்டு உங்களை தனியா சந்திச்சு பேச நினைச்சேன்... உங்கள் தொலைபேசி எண் எனக்குத் தெரியும். அந்த எண்ணை தொலைபேசி அலுவலகத்தில்



சொல்லி முகவரி கேட்டேன். கொடுத்தாங்க. இப்போ கல்லூரிக்குப் போகிற வழியில் உங்களைப் பார்த்து பேசிட்டு போகலாம்ன்னு வந்தேன். இங்கே வந்தபிறகுதான் உங்களுக்கு கல்யாணம் ஆகியிருக்கிற விசயம் தெரிஞ்சது. மன்னிக்கணும்..."

"பரவாயில்லை."

"உங்கள் கணவருக்கு என்ன வேலை?"

"அ... அவர் ஒரு வியாபாரி. இப்பக்கூட வியாபார விசயமா டெல்லிக்குத்தான் போயிருக்கார்."

விஜி எழுந்துகொண்டாள்.

"நான் வர்றேன். உங்களுக்கு தொந்தரவு கொடுத்ததுக்காக மன்னிக்கணும்."

"இதுல மன்னிக்க என்ன இருக்கு? முதல் தடவையா என் வீட்டுக்கு வந்திருக்கிங்க... ஏதாவது சாப்பிடறீங்களா?"

"வேண்டாம். நான் கிளம்பறேன்."

விஜி வெளியேறி போர்டிகோவை நோக்கிப் போக— சன்னல் கம்பிகளைப் பற்றிக்கொண்டு—போகிற அவளையே மனம் கனக்க பார்த்தாள் அனிதா.

'இவளுக்கு ஏதாவது விசயம் தெரிந்திருக்குமோ?'

அனிதாவின் அடிவயிற்றிலிருந்து நீளமாய்— வெப்பமாய் ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது.

# 17

மதியம் ஒரு மணி.

பகல் உணவு சாப்பிடத் தோன்றாமல் கட்டிலில் மல்லாந்து படுத்து– சுழலும் மின்விசிறியையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான் ஆனந்த். பயம் உயிருள்ள ஒரு சந்து மாதிரி நிமிடத்துக்கு ஒரு தடவை மனக்கதவைத் திறந்துகொண்டு எட்டிப் பார்த்தது.

'பாலகங்காதரன் செத்துப்போனதை போலீசார் கண்டுபிடித்துவிடுவார்களா?'

'அலிதா இந்தப் பிரச்சினையை எப்படி சமாளிக்கப் போகிறாளோ?'

'விசயம் வெளியே கசிந்துவிட்டால் இரண்டு பேருமே மாட்டிக்கொள்ள வேண்டியதுதான்!'

'தட்... தட்...' இதயம் பயத்தில் தாறுமாறாய் துடித்துக்கொண்டிருக்கும்போதே– வாசலில் அழைப்பு மணி சத்தம் எழுப்பியது.

ஆனந்த் எழுந்தான்.

"இந்த நேரத்துக்கு யார்...?'

'கல்லூரியிலிருந்து விஜி திரும்பிவிட்டாளா?'

யோசித்துக்கொண்டே போய்– கதவைத் திறந்தான் ஆனந்த்.

வெளியே–



ஜி.எம்.மின் பி.ஏ. ரகுராம் நின்றிருந்தான்.

"ஓ...! ரகுராம் நீங்களா... வாங்க."

"மன்னிக்கணும் சார். நீங்கள் ஓய்வு எடுக்கிற நேரத்துல வந்து தொந்தரவு பண்றேன்..."

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. வாங்க."

ரகுராம் கையில் வைத்திருந்த சூட்கேசோடு உள்ளே வந்தான். ஆனந்த் பின்தொடர்ந்து வந்தபடியே கேட்டான்.

"என்ன ரகுராம்... ஜி.எம். ஏதாவது சொல்லி விட்டாரா?"

ரகுராம் சின்ன சிரிப்போடு பதில் சொல்லாமல் சோபாவுக்கு சாய்ந்து உட்கார்ந்து ஆனந்தையே பார்த்தான்.

"என்ன ரகுராம்... நான் கேட்டதுக்கு பதில் சொல்லாமே என்னையே பார்த்துட்டிருக்கீங்க?"

"நீங்கள் என்ன கேட்டீங்க?"

"ஜி.எம். ஏதாவது சொல்லிவிட்டாரான்னு கேட்டேன்."

"ஆமா. சொல்லிவிட்டார்."

"என்ன?"

"உங்களை தற்கொலை பண்ணிட்டு சாகச் சொன்னார்.

## 18

ஆனந்தின் கண்கள் அதிர்ச்சிக்கு போயிற்று.

"ரகுராம்! நீங்கள் என்ன சொல்றீங்க?"

அவன் சிரித்தான்.

"ஜி.எம். சொன்னதைத்தான் அப்படியே உங்ககிட்ட சொன்னேன். உங்களை வேலையிலிருந்து சஸ்பெண்ட் பண்ணியிருக்கிறதால... அந்த அவமானத்தை தாங்கிக்க முடியாத நீங்கள் தற்கொலை ப்ண்ணிட்டு செத்துப் போறதுதான் நியாயம்ன்னு அவர் சொன்னார். இதோ உங்களுக்காக அவர் தூக்கு மாட்டிக்கிறதுக்காக கயித்தைக் கூட அனுப்பி வைச்சிருக்கார்..." ரகுராம் சொல்லிக் கொண்டே சூட்கேசைத் திறந்து ஒரு மீட்டர் நீளம் இருந்த அந்த நைலான் கயிற்றுச்சுருளை எடுத்து குறுமேசையின் மேல் வைத்தான்.

ஆனந்தின் உள்மனதில் அலாரம் அடித்தது.

'ரகுராமின் முகம் சரியில்லை!'

'பேச்சு சரியில்லை!'

'இவன் பேசும் பேச்சுக்குப் பின்னால் ஏதோ விசயம் இருக்கிறது!'

ரகுராம் கால்மேல் கால் போட்டுக்கொண்டு ஆனந்தைப்





பார்த்து சிரித்தான்.

"என்ன ஆனந்த் அப்படி பார்க்கிறீங்க? நான் ஏதோ தமாசுக்கு சொல்றதா நினைக்காதீங்க... உண்மையாக ஜி.எம். உங்களை தற்கொலை பண்ணிக்கச் சொன்னார். நீங்கள் ஒரு பெரிய கம்ப்யூட்டர் என்ஜினீயர். அதுவும் பெரிய பதவியில் இருக்கிற ஒரு அதிகாரி. ஒரு சஸ்பெண்ட் ஆர்டரை உங்களால தாங்கிக்க முடியுமா என்ன? கழுத்துல சுருக்கை மாட்டிகிட்டு தொங்கிடுங்க! சாகறதுக்கு பயமா இருந்தால் இந்த விஸ்கி பாட்டிலை உள்ளே தள்ளிட்டு அந்த போதை தெளியறதுக்கு முந்தியே... கழுத்துக்கு கயித்தை மாட்டிகிட்டு தொங்கிடுங்க."

ஆனந்தின் முகம் கோபத்தில் சிவந்தது. "ரகுராம்! மரியாதையா வெளியே எந்திரிச்சு போயிடு. ஜி.எம்.மோட பேச்சும் உன் பேச்சும் சரியில்லை... போ வெளியே..."

"மன்னிக்கணும் மிஸ்டர் ஆனந்த். இன்னிக்கு உங்கள் ஆயுள் முடியுது... நீங்கள் தூக்கில் தொங்கித்தான் ஆகணும்."

"ஏய்... டேய்... ராஸ்கல்!" கத்திக்கொண்டே ரகுராம் மேல் பாய முயன்ற ஆனந்த்– வாசல் கதவை யாரோ திறந்துகொண்டு உள்ளே வரும் சத்தம் கேட்டு–

திரும்பிப் பார்த்தான்.

உச்சபட்ச அதிர்ச்சி ஆனந்தின் மூளையைத் தாக்கியது.

பாலகங்காதரன் கதவைத் தாழிட்டுவிட்டு ஒரு புன்னகையோடு வந்துகொண்டிருந்தார்.



# 19

ஆனந்தின் கண்கள் ஆச்சரியத்தின் எல்லைக்கேபோய் அகலமாய் விரிந்தன.

"நீ... நீங்க...?" உதடுகள் வியப்பில் பிளந்து வார்த்தையை நடுக்கமாய் உச்சரிக்க– பாலகங்காதரன் சிரித்துக்கொண்டே பக்கத்தில் வந்தார். கையில் இப்போது துப்பாக்கி உட்கார்ந்திருந்தது.

"என்ன... ஆனந்த்... அப்படி பார்க்கிறே? பெட்ரோலை ஊற்றி எரிக்கப்பட்டவன் எப்படி உயிரோடு வரமுடியும்னு பார்க்கிறியா? அந்த விபரமெல்லாம் உனக்குத் தெரிய வேண்டாம். நீ இப்போ பண்ணவேண்டிய ஒரே வேலை தூக்கில தொங்கி உயிரை விடறதுதான்..."

ஆனந்த் பிரமித்துப்போய் பின்னுக்கு நகர்ந்தான். கால்களில் பயம் சங்கிலியை கோர்த்த மாதிரி பிணைத்துக் கொண்டது.

'இதெல்லாம்... என்ன?'

'எதற்காக என்னை சாகச் சொல்கிறார்கள்?'

'நான் செத்துப்போவதால் அவர்களுக்கு என்ன லாபம்? அனிதாவுக்கும் இந்த சதியில் பங்கு இருக்கிறதா?' கேள்விகள் மனசுக்குள் வேகவேகமாய் முளைத்தன.

"இப்படியே சும்மா திகைச்சுபோய் பார்த்துட்டிருந்தா

என்ன அர்த்தம்? போய் அந்த நாற்காலியில் உட்கார்..." பாலகங்காதரன் கையில் இருந்த துப்பாக்கியை அசைக்க– ஆனந்த் மிரண்டுபோய் பக்கத்தில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தான்.

ரகுராம் சூட்கேசில் இருந்து ஒரு கயிற்றுச்சுருளை எடுத்து– ஆனந்தை நாற்காலியோடு சேர்த்துக் கட்டி– வாயில் ஒரு துணிப்பந்தை திணித்தான். பாலகங்காதரன் பக்கத்தில் வந்து– கையில் இருந்த துப்பாக்கியால் ஆனந்தின் மோவாயில் வைத்து நிமிர்த்தினான். "இதே துப்பாக்கியால இதே நிமிடம் உன்னைச் சுட்டுக் கொல்ல முடியும். ஆனால், அது கொலையாயிடும். போலீஸ் விசாரணை அது இதுன்னு கிளம்பிடுவாங்க. நீ தற்கொலை பண்ணிகிட்டா யாருக்கும் எந்த பிரச்சினையும் இல்லை. உன்னை வேலையிலிருந்து சஸ்பெண்ட் பண்ணிட்டதாலே நீ மனசு உடைஞ்சுபோய் தற்கொலை பண்ணிகிட்டதா எல்லாரும் நினைப்பாங்க. அதையேதான் போலீசும் நினைக்கப் போகுது..."

ஆனந்த் கண்களில் பெரிதாய் மிரண்டான்.

ரகுராம் தன் கையில் இருந்த விஸ்கி பாட்டிலைத் திறந்தான். "ஆனந்த் சார்! உங்களை சஸ்பெண்ட் பண்ணின துக்கம் தாங்காமே... எக்கச்சக்கமா குடிச்சுட்டு தூக்குல தொங்கிட்டதா போலீஸ் கேசை பைல்பண்ணி– அதை ஒரு வாரத்துக்குள்ளே முடிக்கவும் போறாங்க..."

சொல்லிக்கொண்டே ஆனந்தின் வாயில் திணிக்கப் பட்டு இருந்த துணிப்பந்தை எடுத்துவிட்டு– விஸ்கி பாட்டிலின் வாயை அவன் வாயோடு பொருத்தினான்.

விஸ்கி கசப்பாய் தொண்டைக்குள் இறங்கியது. ஆனந்த் விழிகள் பிதுங்க மூச்சுத் திணறினான்.



கக்... கக்... கக்...

"உம்... குடி ஆனந்த்... உன்னை மாதிரியான அதி புத்திசாலியான கம்ப்யூட்டர் என்ஜினீயர் உயிரோடு இருந்து ஒரு கம்பெனிக்காக மட்டுமே உழைச்சா மற்ற கம்பெனிகளின் நிலைமை என்னாவது?"

கக்... கக்... கக்...

விஸ்கி இறங்கிக்கொண்டிருந்தது.

ரகுராம் பாலகங்காதரனை ஏறிட்டான். "சூட்கேசில் இருக்கிற நைலான் கயித்தை எடுத்து– அந்த பேன்ல மாட்டி ஒரு சுருக்கை தயார்பண்ணுங்க... தொங்க விட்டுட்டு போயிடலாம்..."

பின்பக்கம் அந்தக் குரல் சட்டென்று கேட்டது.

"அது அவ்வளவு சுலபமில்லை ரகுராம்..."

இருவரும் திடுக்கிட்டுப்போய்த் திரும்பினார்கள்.

அறை வாசலில் அந்த இன்ஸ்பெக்டர் நின்றிருந்தார்.

கையில் துப்பாக்கி.

பாலகங்காதரன் திடுக்கிட்டுப்போய்– தன் கையில் இருந்த துப்பாக்கியை உபயோகப்படுத்துவதற்குள் இன்ஸ்பெக்டரின் கையிலிருந்த துப்பாக்கி தோட்டாவை உமிழ– பாலகங்காதரனின் கெண்டைக்கால் இரத்தமாயிற்று.

'ஆ'வென்ற அலறலோடு மடங்கினார். எகிறி விழுந்த அவரது துப்பாக்கியை அவசரமாய் பொறுக்கிக் கொண்டார் இன்ஸ்பெக்டர்.

## 20

**போ**லீஸ் லாக்கப்.

ரகுராமையும் பாலகங்காதரனையும் நாற்காலியில் உட்கார்த்தி வைத்து கையில் இருந்த லாட்டியின் உதவியால் விசாரித்துக்கொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர். பக்கத்திலேயே ஆனந்தும், விஜியும் நின்றிருந்தார்கள்.

நாசித்துவாரங்களில் உறைந்துபோன இரத்தத்தோடு ரகுராம் சொல்லிக்கொண்டிருந்தான்.

"சார்! ஆனந்த் ஒரு அதி புத்திசாலியான கம்ப்யூட்டர் என்ஜினீயர். அவர் நிர்மாணம் பண்ணின கம்ப்யூட்டர் களுக்கு மார்க்கெட்டில் நல்ல மதிப்பு இருந்தது. அவரை தன் பக்கம் இழுக்க எத்தனையோ போட்டி கம்பெனிகள் முயற்சி செஞ்சாங்க... ஆனால், ஆனந்த் யாருக்கும் மசியலை. தான் வேலை பார்த்த கம்பெனிக்கு விசுவாசமா இருந்தார். இந்த நேரத்துலதான் 'வர்தா'ன்னு ஒரு சேட் தன்னோட கம்பெனிக்கு ஆனந்தை இழுக்கப் பார்த்தார். அந்த முயற்சி தோற்றுப்போகவே– ஆனந்தோட புத்திசாலித்தனம் யாருக்குமே உபயோகப்படக்கூடாது என்கிற எண்ணத்தில் அவரை அழிக்க திட்டம் போட்டார்..."

இன்ஸ்பெக்டர் குறுக்கிட்டு கேட்டார்.

"என்ன திட்டம்?"

"ஆனந்த் இவ்வளவு புத்திசாலித்தனமா இருக்கிறதுக்கு காரணம் அவரோட சந்தோசமான வாழ்க்கைதான். அந்த சந்தோசத்தை சேகம்பண்ணி மனசுக்கு கஷ்டத்தைக்



கொடுத்தா... அவனுடைய கெட்டிக்காரத்தனம் மழுங்கிப் போகும்ன்னு நினைச்சார். அதுக்காக அவருக்கு ஏற்கனவே பழக்கமாயிருந்த அனிதாவோட உதவியை நாடினார். அனிதா அவ்வளவு நல்ல பெண் இல்லை. அவள் ஒரு மாதிரி. வர்தா போட்டுக் கொடுத்த திட்டம் இதுதான். அனிதா ஏதாவது ஒரு வகையில் ஆனந்தோடு பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது. அவருடைய அனுதாபத்தை பெறுகிற மாதிரி தன்னோட வயதான கணவர் தன்னை சித்ரவதைப்படுத்தறதாகவும், தான் ஒரு நரக வாழ்க்கை வாழ்ந்துட்டிருக்கிறதாகவும் சொல்ல வேண்டியது. பிறகு ஏதாவது ஒரு நாளில் ஆனந்தை வீட்டுக்கு வரவழைத்து– வயதான கணவரைக் கொன்ற கொலைப் பழியில் மாட்ட வைத்து– ஆனந்தின் நிம்மதி யையும், சந்தோசத்தையும் குலைக்க வேண்டியது..."

இன்ஸ்பெக்டர் தன் கையில் இருந்த லாட்டியால் பாலகங்காதரனின் தோளைத் தட்டினார்.

"இனி நீ சொல்லு."

பாலகங்காதரன் மிரண்டுபோன விழிகளோடு– வறண்ட தன் உதடுகளை அசைத்தார்.

"நான் வர்தாவுக்கு வேண்டிய ஆள். அனிதாவுக்கு வயதான கணவராய் வர்தா என்னை நடிக்கச் சொன்னார். அவர் சொல்லிக் கொடுத்த மாதிரியே... ஆனந்த் அனிதா வீட்டுக்கு வந்தபோது... ஒரு நாடகம் நடத்தி என்னைக் கொலை செய்த மாதிரியான பழியில் ஆனந்தை மாட்ட வைத்தோம். ஆனந்த் கையில் இருந்த பொய்த் துப்பாக்கியை வெடிக்க வைத்து– அதே வினாடி என் மார்பில் பொருத்தியிருந்த 'இரத்த உறை'யை அழுத்தி செயற்கை இரத்தத்தை தெறிக்க வைச்சு கீழே சரிந்தேன். பிணமா நடிக்க ஆரம்பிச்சேன். பிணத்தை எரிக்கிறதுக்காக–

ஆவடி போகிறவழியில் காரை நிறுத்தி– ஆனந்த் பெட்ரோல் வாங்க போகும்போது– கார் பின்சீட்டுக்கு கீழே இருந்த நான் எந்திரிச்சுட்டேன். எனக்குப் பதிலா ஒரு உருவ பொம்மையை இரத்தக் கறையான போர்வையில் சுத்தி படுக்க வைச்சுட்டு கிளம்பிட்டேன்."

"உருவ பொம்மையை கொண்டுவந்தது யாரு?"

"ரகுராம்! எங்க காருக்குப் பின்னாடியே ரகுராம் வேற ஒரு கார்ல உருவ பொம்மையோடு வந்துட்டிருந்தான்."

"இந்த சதித் திட்டத்துக்கு ஜி.எம்.மும் உடந்தை தானே?"

"ஆமா! அவர் ஆனந்தோட மனக் கவலையை சாதகமாக்கி– கம்ப்யூட்டரில் தவறுபண்ணி– அந்த தவறை காரணம் காட்டி எம்.டி. மூலமா சஸ்பெண்ட் பண்ணி வைச்சது ஜி.எம்.தான். இந்த திட்டத்தை வெற்றிகரமா செயல்படுத்தி– ஆனந்தை தற்கொலை போர்வையில் தீர்த்துக்கட்ட வர்தா எங்களுக்கு கொடுத்த பணம் பத்து இலட்சம்."

அந்த சப்–இன்ஸ்பெக்டர் உள்ளே வந்தார்.

இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"என்ன லட்சுமண்?"

"அனிதாவை மகளிர் போலீஸ் கைதுபண்ணி அவங்க பாதுகாப்புல வைச்சு வாக்குமூலம் வாங்கிட்டிருக்காங்க சார்."

"வர்தா, ஜி.எம். ரெண்டு பேரையும் கைதுபண்ணனும்!



வாசல்ல ஜீப் இருக்கா?"

"இருக்கு சார்."

இன்ஸ்பெக்டர் லாக்கப்பைவிட்டு வெளியே வர– ஆனந்தும், விஜியும் அவரைத் தொடர்ந்தார்கள்.

காத்திருந்த ஒரு பத்திரிகை நிருபர் எதிர்பட்டு கேட்டார்.

"சார்... இந்த கேசில் குற்றவாளிகளை எப்படி கண்டுபிடிச்சீங்க?"

இன்ஸ்பெக்டர் நின்று புன்னகைத்தார். "மிஸ் விஜியை கேட்டுத் தெரிஞ்சுக்குங்க... எனக்கு நிக்க நேரமில்லை."

பத்திரிகை நிருபர் விஜியின் பக்கம் பேப்பர் பேனாவோடு திரும்பினார்.

"சொல்லுங்க மேடம்..."

விஜி மெல்லிய குரலில் பேச்சை ஆரம்பித்தாள். "அண்ணன் ஆனந்தோட மனக் கவலைக்கு காரணம் ஏதாவது காதல் விவகாரமாய் இருக்குமோன்னு நினைச்சு அனிதாவோட வீட்டுக்குப் போனேன். அனிதாவுக்கு என்னைப் பார்த்ததுமே அதிர்ச்சி. ஆனால், அந்த அதிர்ச்சியை வெளியே காட்டிக்காமே பேசினாள். பேசிட்டிருக்கும்போது அவளோட பார்வை அடிக்கடி பக்கத்து அறைக்கு போய்ட்டு போய்ட்டு வந்தது. அவள்கிட்ட ஏதோ தப்பு இருக்குன்னு என் மனசுக்குப் பட்டது. நான் இயல்பா பேசிட்டு வெளியே வந்ததும் வீட்டுக்கு பின்பக்கமா போய் குட்டையான காம்பவுண்ட்

சுவரை தாண்டி குதிச்சு வீட்டுக்கு பக்கவாட்ல போய்– சன்னல் வழியா எட்டிப் பார்த்தேன். அனிதாவோடு ரகுராம் பேசிட்டிருந்தது தெரிஞ்சது. பேச்சை உன்னிப்பா கேட்டேன். 'மத்தியானம் ஒரு மணியிலிருந்து ரெண்டு மணிக்குள்ளே திட்டத்தோட கடைசி திட்டத்தை நானும் பாலகங்காதரனும் முடிச்சுடறோம். ஆனந்த் பிரச்சினைக்கு பெரிசா ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்போகிறோம். வர்தா போன் பண்ணி கேட்டால் தகவல் சொல்லிடுங்க'ன்னு ரகுராம் சொல்லிட்டிருந்தான். 'என்ன திட்டம்?' என்று எனக்கு ஒண்ணும் புரியலை. ஏதோ திட்டம் போட்டிருக்காங்கன்னு மட்டும் புரிஞ்சது. என்னோட கல்லூரித் தோழி ராகினியின் அண்ணன் போலீஸ் வேலையில் இருக்கிறது ஞாபகத்துக்கு வந்தது. அவரிடம் போய் விசயத்தை சொன்னேன். உடனே போலீஸ் எச்சரிக்கையாகி– ரகுராமை கண்காணிக்க ஆரம்பிச்சாங்க. அவன் சரியா ஒரு மணிக்கு ஆபீசைவிட்டு கிளம்பி வெளியே வந்தான். போலீஸ் அவனை பின்தொடர்ந்தது– என்னோட அண்ணனை கொலை செய்ய முயற்சி பண்ணின பாலகங்காதரனையும், ரகுராமையும் மடக்கினாங்க. இன்ஸ்பெக்டர் பின்பக்க குழாய் வழியா மொட்டை ,மாடிக்குப் போய்– படிக்கட்டுகள் வழியா சத்தமில்லாமல் வீட்டுக்குள்ளே போனார்..."

பத்திரிகை நிருபர் ஆனந்தை ஏறிட்டார்.

"மிஸ்டர் ஆனந்த்! நீங்கள் இந்த கேசைப் பற்றி என்ன நினைக்கிறீங்க?"

"எனக்கு பின்னாடி இவ்வளவு பெரிய சதி உருவாகி இருக்கிறதை நினைச்சா எனக்கு ஆச்சரியமாயிருக்கு. நான்



யாருக்கும் எந்த தீங்கும் பண்ணலை. ஆண்டவன் எனக்கு நல்ல படிப்பையும், அதிகப்படியான புத்திசாலித்தனத்தையும் கொடுத்திருக்கான். இது வர்தாவோட மனசுல பொறாமைத் தீயை வளர்த்திருக்கு. என்னை அவர் அழிக்கப் பார்த்திருக்கார். ஆனால், ஒரு விசயம் அவருக்கு தெரியாமே போயிடுச்சு..."

பத்திரிகை நிருபர் கேட்டார்.

"என்ன அது?"

"பொறாமை குணம் யார் மனசில இருக்கோ அது அவங்களையே எரிச்சுடும்."

(முடிந்தது)

---

ராணி பப்ளிகேசன் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: அ.மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.

சுவரை தாண்டி குதிச்சு வீட்டுக்கு பக்கவாட்ல போய்– சன்னல் வழியா எட்டிப் பார்த்தேன். அனிதாவோடு ரகுராம் பேசிட்டிருந்தது தெரிஞ்சது. பேச்சை உன்னிப்பா கேட்டேன். 'மத்தியானம் ஒரு மணியிலிருந்து ரெண்டு மணிக்குள்ளே திட்டத்தோட கடைசி திட்டத்தை நானும் பாலகங்காதரனும் முடிச்சுடறோம். ஆனந்த் பிரச்சினைக்கு பெரிசா ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்போகிறோம். வர்தா போன் பண்ணி கேட்டால் தகவல் சொல்லிடுங்க'ன்னு ரகுராம் சொல்லிட்டிருந்தான். 'என்ன திட்டம்?' என்று எனக்கு ஒண்ணும் புரியலை. ஏதோ திட்டம் போட்டிருக்காங்கன்னு மட்டும் புரிஞ்சது. என்னோட கல்லூரித் தோழி ராகினியின் அண்ணன் போலீஸ் வேலையில் இருக்கிறது ஞாபகத்துக்கு வந்தது. அவரிடம் போய் விசயத்தை சொன்னேன். உடனே போலீஸ் எச்சரிக்கையாகி– ரகுராமை கண்காணிக்க ஆரம்பிச்சாங்க. அவன் சரியா ஒரு மணிக்கு ஆபீசைவிட்டு கிளம்பி வெளியே வந்தான். போலீஸ் அவனை பின்தொடர்ந்தது– என்னோட அண்ணனை கொலை செய்ய முயற்சி பண்ணின பாலகங்காதரனையும், ரகுராமையும் மடக்கினாங்க. இன்ஸ்பெக்டர் பின்பக்க குழாய் வழியா மொட்டை மாடிக்குப் போய்– படிக்கட்டுகள் வழியா சத்தமில்லாமல் வீட்டுக்குள்ளே போனார்..."

பத்திரிகை நிருபர் ஆனந்தை ஏறிட்டார்.

"மிஸ்டர் ஆனந்த்! நீங்கள் இந்த கேசைப் பற்றி என்ன நினைக்கிறீங்க?"

"எனக்கு பின்னாடி இவ்வளவு பெரிய சதி உருவாகி இருக்கிறதை நினைச்சா எனக்கு ஆச்சரியமாயிருக்கு. நான்



யாருக்கும் எந்த தீங்கும் பண்ணலை. ஆண்டவன் எனக்கு நல்ல படிப்பையும், அதிகப்படியான புத்திசாலித்தனத்தையும் கொடுத்திருக்கான். இது வர்தாவோட மனசுல பொறாமைத் தீயை வளர்த்திருக்கு. என்னை அவர் அழிக்கப் பார்த்திருக்கார். ஆனால், ஒரு விசயம் அவருக்கு தெரியாமே போயிடுச்சு..."

பத்திரிகை நிருபர் கேட்டார்.

"என்ன அது?"

"பொறாமை குணம் யார் மனசில இருக்கோ அது அவங்களையே எரிச்சுடும்."

(முடிந்தது)

ராணி பப்ளிகேசன் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: அ.மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.